208587

ஆனந்த விகடன்
26.12.43

JL
m, N26 AV
N43
208587

ஆனந்த விகடன்

26.12.43

470

# ஆனந்த விகடன்

52

, DECEMBER 1943

விலை அணா நான்கு



72
XII, N8Lலை
43·18·52
208587

A VIKATAN MADRAS

நண்பர் (பத்திரிகை வைத்திருப்பவரைப் பார்த்து):— என்ன ஸார்!
பேப்பரிலே ஒன்னும் ஸ்வாரஸ்யமா இல்லையோ?



"அவனுடைய பலம் எங்கிருந்து வருகிறது?"

இதர ஸ்திரீகள் தன்னுடைய குழந்தையைப் பற்றி புகழ்ந்து பேசும்போது தாய்மார்களுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகிறது. தங்கள் குழந்தைகள் தேக ஆரோக்கியமாக இருக்க அவர்கள் எடுத்துக் கொள்ளும் சிரமம் மெச்சக் கூடியது. போதிய பலம் இல்லாத குழந்தைகள் சீக்கிரம் சக்தியை இழந்து ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

உங்களுடைய குழந்தைகளுக்கு விடமின் கூடினதும், போஷாக்கை அளிக்க வல்லதுமான ஆகாரத்தைக் கொடுப்பது அத்தியாவசியம். இந்த சமயத்தில் தான் விடமின் சேர்ந்த டால்டா நன்கு உதவுகிறது. டால்டாவினால் ஆகாரத்திற்கு சேர்க்கப்படும் விடமினும், போஷக சக்தியும் தான் பலத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் காரணம். குடும்பத்தினுள்ளவர்களுக்கு பலம் அளிக்க மாகையால் வேண்டிய ஆகாரங்களை டால்டாவினால் சமையல் செய்யுங்கள்.

விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது . . . விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரத்தக்கது. உணவுகளை டால்டாவினால் தயார் செய்தால் ஆகாரத்திற்கு அதிக சக்தி கிடைக்கிறது. அநேக உணவுப் பொருள்களில் விடமினும், சக்தியும் குறைவாக இருப்பதால், டால்டாவினால் உணவுகள் தயாரிப்பது ஓர் சிறந்த முறை. அது பாலர்களுக்கும், விருத்தர்களுக்குங்கூட நல்லது.

விடமின் சேர்ந்த டால்டா

தாவர எண்ணெயால் தயார் செய்யப்பட்டதென்று உத்தரவாதமுள்ளது —

சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது




HVM. 20-50 TM THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY



ஸ்ரீமதி எம்.எஸ். ஸுப்புலக்ஷ்மியின்

புதிய "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரிகா

கண்ணொடுத்தாகிலும் } N. 18218
சிம்மேந்திரமத்திமம்–2 பாகங்கள் }

H. SAMU

"நீண்டகாலம் உபயோகிக்கக் கூடிய "எச். எம். வி."

ஹைபிடெலிடி ஊசிகள்

★ ஒரு ஊசியினால் பல ரிகார்டுகளைப் பாட வைக்கலாம் | 10 ஊசிகளடங்கிய பாக்கெட் 1-க்கு விலை ரூ. 2-4.

1—2612


'கோத்ரெஜ்' ஸோப் ஒன்றை க்ஷவரத்திற்கும் உபயோகியுங்கள்
பிரமாதமான தயாரிக்கும் முறை, பறபல உபகரண வஸ்துக்களின் அதி ஜாக்கிரதையான சேர்வை, தனிமைப்பட கோத்ரெஜ் சௌந்தர்யப் பொருட்களில் உபயோகிக்கப்படும் சுத்தமான தாவர எண்ணைகளின் சோதனை, ஆராய்ச்சி ஆகிய இக்குணங்கள் கோத்ரெஜ் ஸ்நான ஸோப்புகளில் பொருந்தியுள்ளன போலவே, கோத்ரெஜ் க்ஷவர ஸோப்புகளிலும் உள்ளன.—எரிச்சல் விளைவிக்கும் "ஆல்கலி" எள்ளளவு மற்றதும், இதத்தையும் மென்மையையும் அளிப்பதுமான தாவரஎண்ணைப் பதைவானது சருமத்திற்கு இருவித போஷண பலன்களை அளிக்கும். ரோமம் அதிக கட்டையாயிருப்பினும், மிருதுவும் எளியதுமான க்ஷவரத்திற்கு முகத்தைத் தயாரிப்பதொன்று; இரண்டாவதாக, அதிமென்மையான சருமத்திற்கும் க்ஷவரத்திற்குப்பின் இதமான உணர்ச்சி அளிப்பது. க்ஷவரத்திற்கும் கோத்ரெஜ் ஸோப் ஒன்றை உபயோகித்து முகத்தை அழகுபெற வைத்துக் கொள்ளுங்கள்
Godrej chavi brand
கோத்ரெஜ்
சாவி மார்க்
ஷேவிங் ஸ்டிக்
ஷேவிங் 'ரவுண்ட்'
கோத்ரெஜ் ஸ்நான ஸோப்புகள்
நம்பர் 1
நம்பர் 2
'வத்னி'
ஸான்டல்
விம்டர
பரமெலி
டர்க்கிஷ் பாத்
Shaving Round
கோத்ரெஜ் ஸோப்ஸ், லிமிடெட்.— மதராஸ் (164, பிராட்வே); கோயம்புத்தூர் (3. தாமஸ் வீதி).


திருப்தி, அமைதி
ஒரு கப் டீ அருந்தியவுடன்.
கேட்டானேன், நரஸூஸ் டீ
தான்! நல்ல காபி, டீயை
அனுபவிக்க அறிந்தவர்கள்
நரஸூஸ் காபி, டீயையே
விரும்புகிறார்கள்.
நரஸூஸ்
இந்தியத்தயாரிப்பில் தலைசிறந்தது
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
சேலம் தென்னிந்தியா
MNK-22-TM



# உண்ணு விரதம்

சாப்பிட்ட பின் வயிற்றில் ஏற்படும் எரிச்சல், உப்பசம், வேதனை இவைகளுக்குக் காரணம் வயிற்றில் உண்டாகும் புளிப்புதான்.

இத் தொல்லைகளுக்காகப் பயந்து கொண்டு பட்டினி கிடக்க வேண்டிய அவசியமில்லை. கொஞ்சம் 'பைசுரேடெட்' மக்னீஷியா சாப்பிடுங்கள். இது புளிப்பைப் போக்கி, வலியை உடனே நிறுத்தி விடுகிறது. 'பைசுரேடெட்' மக்னீஷியாவை ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள். 'பைசுரேடெட்' மக்னீஷியா பௌடரும், பில்லைகளும் எல்லா கெமிஸ்டுகளிடமும், கடைகளிலும் கிடைக்கும்.

**பைசுரேடெட் மக்னீஷியா**

No. 835 V

## மாமிச கோசத்திற்கு யௌவன மளித்து ஜீவசக்தியைத் தருகிறது — ஆபரேஷன் தேவையில்லை

பலஹீனம், நரம்புத் தளர்ச்சி, ஞாபகக் குறைவு இவற்றினால் துயரப்பட்டு பால்யத்திலேயே தேகம் தள்ளாடிக் கிழத்தனம் தோன்றுகிறதா? இதற்கு பிரபல அமெரிக்க டாக்டர் கண்டுபிடித்த ஒரு புதிய வீட்டு சிகிச்சை இருக்கிறது. அதனால் அதி சீக்கிரத்தில் நீங்கள் தேகாரோக்கியத்தையும் ஜீவ சக்தியையும் திரும்பவும் பெற்று சுகமடைவீர்கள். ஆபரேஷனைவிட அதி சீக்கிரத்தில் குணமளிக்கும். நிர்ப்பயமாகவும், சுலபமாகவும் எடுத்துக் கொள்ளலாம். 24 லிருந்து 48 மணி நேரத்தில் புதியதொரு ஆரோக்கியத்தையும் இளமையையும் ஜீவசக்தியையும் தருகிறது. உங்களது நாடிகளில் புதிய ரத்தம் ஓட ஆரம்பிக்கும். இது மாமிச கோசத்திலும், நரம்புகளிலும் சாதாரணமாக வேலை செய்வதனால், உங்களது மூளை சக்தி, ஞாபக சக்தி, கண்பார்வை முதலியவைகள் மிகவும் தீட்சண்யமாகிறது. புத்துயிரளிக்கும் இம் மகா சஞ்சீவிதான் வை-டாப்ஸ் (Vi-Tabs) என்று வழங்குவது. பூர்ண குணமளிக்க உத்தரவாதமுள்ளது. அமெரிக்காவில் ஆயிரக் கணக்கானவர்களுக்கு குணமளித்துள்ளது. எங்கும் கிடைக்கும். 24 மணி நேரத்தில் குணம். 8 நாட்களுக்கான பெரிய சைஸ் பாட்டில் வாங்கி உபயோகியுங்கள். தேகாரோக்கியமும் ஜீவசக்தியும் பெற்று உங்கள் சரீரத்தில் இளமை தோன்றுவது நிச்சயம். அன்றேல் காலிப்பெட்டிகளை அனுப்பினால் பணம் வாபஸ் செய்யப்படும். 48 மாத்திரைகள் கொண்ட வை-டாப்ஸ் பாட்டிலின் விலை சொல்பந்தான். உத்தரவாதமுள்ளதால்

**வை-டாப்ஸ்** பயமில்லை.

**பௌருஷத்தையும், வீர்யத்தையும் மீண்டுமளிக்கிறது.**

Ad.No. 25/2




யார்ட்லியின் அழகுச் சாதனைகளில் பல தற்காலிகமாக வெளிவருவதில்லை. ஆனால் முக்கியமானவைகளில் சில இன்னும் கிடைத்து வருகின்றன. உங்களை அழகுபடுத்திக் கொள்வதற்கு வெகு காலமாக யார்ட்லியையே நம்பி வந்திருக்கும் நீங்கள் யார்ட்லியின் மனோகரமான பாண்ட் ஸ்டிரீட் பௌடர், ப்யூடி கிரீம்கள், உள்ளங் கவரும் லாவண்டர் டால்கம் இவைகள் இன்னும் கிடைத்து வருவதுபற்றி மிகவும் மகிழ்ச்சி யடைவீர்கள். யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்டதும் யார்ட்லியின் அழகுச் சாதனைகள் எல்லாம் மறுபடி கிடைக்கும்!



**Yardley**

**of London**

33 · OLD BOND STREET · LONDON



# சிறந்த சமையற்காரர்கள் இப்பொழுது வேண்டுவது

# காமதேனு

சாதாரண தினப்படி சமையலாக இருந்தாலும் சரி அல்லது விசேஷ விருந்துகளுக்கான பலகார வகைகளானுலுஞ் சரி, அவற்றின் இயற்கைச் சுவை மாருமல் தயாரிக்க சிறந்த சமையற்காரர்கள் காமதேனுவையே விரும்புகிருர்கள். எந்த உணவையும் மணம் மாருமல் தயாரிக்க உதவுவது காமதேனு. ஏனெனில் அது சுவெற்று மணமற்று இருப்பதால் உணவின் இயற்கை மணத்தைக் கெடாமல் காக்கிறது. மேலும் சுத்தமாக உள்ளதாகையால் ஆரோக்கியம் அளிக்கவல்லது. காமதேனுவை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு; சமையலுக்கு நெய், வெண்ணெயைப் போலுள்ளதாயினும் விலையில் மட்டும் மலிவு.






சிறந்த சமையற்காரர்கள் வேண்டுவது

## காமதேனு

## வனஸ்பதி

தயாரிப்பவர்கள் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்.

மேட்டூர்டாம்

தென்னிந்தியா

KVK.3.T.M.

BB-29-A



நல்ல போஷாக்கும், உள்ளத்தில் திருப்தியும் நிறைந்த குழந்தை எப்பொழுதும் குதூகலமாக இருக்கும். வாங்க முடியும் போதெல்லாம் குழந்தையின் தாய் பிரிட்டானியா பிஸ்கத்துகள் வாங்குகிருள். ஏனெனில் இவை மிகவும் இனிமையாய் இருப்பதுடன், போஷாக்கும் மிகுந்தவை என்பது குழந்தையின் தாயிக்குத் தெரியும்.



# பிரிட்டானியா பிஸ்கத்துக்கள்

இவனுக்கு முதல் அவசியமானவை

# ஹபீப் பாங்க்
## தங்கப்பாளங்கள்



இந்தியாவில் எங்கும் கிடைக்கும்




வெகு காலமாக, கண்டு களித்த—நாணயந்நிற்கும், உத்திரவாதத்திற்கும் அறிகுறியான—குவேகர் மனிதனை விரைவில் மறுபடியும் காணுவீர்கள். இனி அவனை ஒவ்வொரு குவேகர் ஓட்ஸ் டின்னிலும் கண்டு, தேக வலிமையும், புஷ்டியையும், சந்தோஷத்தையும் தரக்கூடிய அந்த உணவுப் பொருளை உண்டு மகிழப் போகிறீர்கள்.




**குவேகர் ஓட்ஸ்**

72Y




போர் முனைகளில் நமது ராணுவ வீரர்களைத் திட
ஆரோக்கியத்துடன் வைத்திருப்பதற்காக கிளிம்
மில்க் ஏராளமாக யுத்த களங்களுக்கு அனுப்பப்படுவதனால்
வியாபாரிகளிடம் சில சமயம் கிளிம் இல்லாமலிருக்கலாம்.
உங்கள் குழந்தைக்கு நீங்கள் கிளிம் கொடுத்து வந்திருந்
தால் டாக்டரிடம் யோசனை கேட்காமல் வேறு பால் ஆகா
ரத்திற்கு மாற்றுதீர்கள். குழந்தை திடமாய் வளருவதற்கு
வேண்டிய போஷாக்கு நிறைந்தது கிளிம். வேறு பால் ஆகாரம்
வாங்குமுன் குழந்தைக்கு வேண்டிய போஷாக்கு அதில்
இருக்கிறதா என்று கவனித்து வாங்குங்கள்.
உங்கள் குழந்தைக்கு கிளிம் கிடைத்து வருவதற்காக, இது
தயாரிப்பவர்கள் முயற்சி செய்து வருகிறார்கள். கிடைக்காத
போது, டாக்டரை யோசனை கேளுங்கள்.

கிளிம் என்பது என்ன! ஜலம் மட்
டும் பிரித்தெடுக்கப்பட்ட புத்தப் புதிய
தூய பசும் பாலே கிளிம். இதனுடன்
வேறொன்றும் சேர்க்கப்படவில்லை. இதை
மறுபடியும் பாலாக்க இதனுடன் நீங்கள்
ஜலம் சேர்த்துக் கொண்டால் போதும்.

ஹானியற்ற, சுத்தமான
பால்

# கிளிம் மில்க்

5W





LOCAL AGENTS:
T. T. KRISHNAMACHARI,
12/A, LINGHA CHETTY ST. :: G. T. MADRAS





ஸன்ஷைன்
கிளாக்ஸோ
எல்லா சிறந்த
கடைகளிலும் கிடைக்கும்




# பொருள் அடக்கம்


மாலை 18 ] [ மணி 52

Ananda Vikatan

டிஸம்பர் 26


எல்லோரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லாமல்
வேறொன் றறியேன்
பராபரமே

●


| | |
|---|---|
| வேவலின் விசித்திர சவாரி (படம்) | 12 |
| விபரீத மௌனம்! | 13 |
| லோக சஞ்சாரம் ... | 16 |
| யுத்த டயரி ... | 18 |
| துக்கடா ... | 20 |
| ஆடல் பாடல் ... | 21 |
| சௌந்தரம்மாள் ... | 26 |
| ஐம்பது வருஷங்களுக்கு முன் | 29 |
| 'கலெக்டர்' விஜயம் (படம்) | 33 |
| தெய்வ சங்கல்பம் | 35 |
| ராஜ வைத்தியர் ... (பாலர் மலர்) | 44 |
| விகடன் பேச்சு ... | 46 |
| யோக சிகிச்சை ... | 48 |
| அண்ணனும் தங்கையும் ... | 52 |
| "பகுத்தறிவு" 370 | — |
| "பகுத்தறிவு" 364 | முடிவு |


●

குறிப்பு:—"ஆனந்த விகட"னில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்கள். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.




வேவலின் விசித்திர சவாரி

28 DEC 1943
MADRAS



# விபரீத மௌனம்!

காட்டிலிருந்த ஒரு நரி, ஊர்ப் பக்கம் ஒரு நாள் இரவு சென்றது. அங்கு ஒரு வீட்டு வாசலில் ஒரு தொட்டியில் சாயம் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த சாயத் தொட்டியில் நரி தவறி விழுந்து விட்டது. இந்தச் சந்தடியில் வீட்டுக்காரன் விழித்துக் கொள்ளவே அது பயந்து போய்த் திரும்பிக் காட்டுக்கே ஓடிப் போயிற்று. பொழுது விடிந்ததும் தன்னுடைய திருமேனியைக் கவனித்த போது அதற்கு "தான் ஒரு நரிதானா?" என்றே தோன்றி விட்டதாம். அதனுடைய நிறம் அவ்வளவு மாறிப் போயிருந்தது.

இந்த நரியைப் பார்த்த இதர மிருகங்க ளெல்லாம் இது ஏதோ ஒரு விதப் புது மிருகம் என்று எண்ணத் தொடங்கின. சாயம் பூசிக் கொண்ட நரியும் இதற்கு ஏற்றபடி தான் ஒரு நரி யல்லவென்றும், தேவலோகத்தி லிருந்து நேரே இப்போது தான் குதித்து வந்திருப்பதாகவும் சொல்லிக் கொண்டே ஊளையிடாமல் காலங் கடத்தி வந்தது. கடைசியில் அதுவும் அதற்கு சாத்திய மில்லாமற் போயிற்று. ஒரு நாள் இரவு தன்னுடைய சுபாவப்படி திடீரென்று பெரிய குரலில் ஊளையிட ஆரம்பித்தது. அந்தக் குரலைக் கேட்டதும் இதர மிருகங்கள் அந்த நரிக்கு எந்த மாதிரி வரவேற்பு அளிக்க வேண்டுமோ அந்த மாதிரி வரவேற்பளித்தன.

இந்த நரியைப் போலவேதான் வேவல் துரையின் காரியங்களும் அவர் வைஸராய் பதவி ஏற்றுக்கொண்டது முதல் இருந்து வந்தன. லண்டனிலிருந்து அவர் புறப்படும்போது, தாம் ஏதோ ஒரு மன மூட்டையைக் கொண்டு வருவதாகவும், அந்த மூட்டையில் அநேக திட்டங்கள் இருப்பதாகவும், அதை இந்தியாவில் கொண்டு போய்த்தான் அவிழ்த்து விடப் போவதாகவும், நடு வழியில் அதை அவிழ்க்கப் போவதே யில்லையென்பதாகவும் சொல்லிக்கொண்டே கிளம்பினர். இன்னும் ஆடம்பரம், அமர்க்களம், விருந்து, சங்கீதம், நடனம், தர்பார், ஊர்வலம் முதலிய வைபவங்களெல்லாம் வேண்டியதில்லை யென்று சொல்லி விட்டுப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

புதிய வைஸராய்கள் பதவிக்கு வந்ததும் சட்ட சபையில் விசேஷப் பிரசங்கம் செய்வது வழக்கம். இந்த வழக்கத்தை வேவல் துரை தூக்கி உடைப்பில் போட்டு விட்டு, "சம்பிரதாயப்படி சட்ட சபையில் பேசுவதற்கு எனக்கு அவகாசமில்லை!" என்று கூறினர்.

பிறகு கல்கத்தாவுக்குப் பறந்து சென்று அங்கே தாண்டவ மாடிக் கொண்டிருக்கும் பஞ்ச நிலைமையைக் கவனித்து 'விட்டுத் திரும்பினுர்.

இவ்வாறெல்லாம் வழக்கத்துக்கு விரோதமான முறையில் வேவல் துரை நடந்து கொண்டு, தம்மைப் பற்றி இந்தியர் களிடையே ஒரு புதிய அபிப்ராயத்தை உண்டு பண்ண முயன்ருர்.

அதாவது, "இதர வைஸராய்களைப் போல் என்னையும் நினைத்துவிட வேண்டாம்! எனக்கும் அவர்களுக்கும் மிகவும் வித்யாசம் உண்டு!" என்று சொல்வது போலவே நடந்து கொண்டு வந்தார்.

இப்படியே அவர் நடந்து கொண்டு வந்திருந்தால் அவருடைய சாயம் இவ்வளவு சீக்கிரமாக வெளுத்திருக்கப் போவதில்லை. இதற்கு மாருக அவர் தம்முடைய திருவாயைத் திறந்து அரசியலைப்பற்றிப் பேசக் கிளம்பியதாலேயே அவருடைய உண்மை சொரூபம் இப்போது வெளிப்பட ஆரம்பித்திருக்கிறது. சென்ற வாரம், கல்கத்தா வர்த்தகச் சங்கக் கூட்டத்தில் அவர் தன்னையும் மீறித் தன்னுடைய மௌன விரதத்தைக் கலைத்துக் கொண்டு அரசியலைப் பற்றிப் பேசி யிருக்கிருர்.

முதன் முதலில் இந்திய விஷயங்களைப் பற்றி, புது வைஸராய் என்ற முறையில், அங்கு செய்த பிரசங்கத்தில் அவர் "என்னுடைய காரியங்கள்தான் வழக்கத்துக்கு விரோதமாக இருக்குமே தவிர, கொள்கைக ளெல்லாம் வழக்கப்படியே தான் இருந்து வரும்!" என்று சொல்வது போல் சில வார்த்தைகளைக் கூறி யிருக்கிருர்.

அதாவது, பதவி ஏற்ற காலம் முதல், அரசியல் விஷயமாக மௌனம் சாதித்து வருவதற்குக் காரணம் என்ன என்பதை விளக்கும் போது அவர், "முதலில் யுத்தத்தில் வெற்றி பெற வேண்டு மென்பதனுலேயே அரசியலைப் பற்றி நான் ஒன்றுமே கூருமல் மௌனமா யிருந்து வருகிறேன். மற்றப்படி, எனக்கு அரசியல் ஞாபகம் இல்லாமலில்லை. இந்தியாவின் சுதந்திர லட்சியத்தில் எனக்கு அநுதாபம் இல்லாமலும் போய் விட வில்லை. யுத்தம் முடிந்தால் அரசியல் நெருக்கடி தானுகவே தீர்ந்து விடுமென்றே கருதுகிறேன்" என்று கூறி யிருக்கிருர்.

"யுத்தத்தை முதலில் கவனிப்போம், அரசியலை அப்புறம் பார்த்துக் கொள்வோம்!" என்று கூறுவது மாஜி வைஸராய் லின்லித்கோவுக்குத் தான் வழக்கமாக இருந்து வந்தது. எனவே, வேவல் துரை இந்தக் குயுக்தியான காரணத்தைத் தாமே புதிதாகக் கண்டு பிடித்து விட்டதாக நினைத்துக்கொள்ள முடியாது. பழைய வைஸராய் லின்லித்கோ துரையின் வாயினுல் ஆயிரத்தெட்டுத் தடவை கூறப்பட்டு, நமக்கும் கேட்டுக் கேட்டு அலுத்துப்போன அதே காரணத்தையே இவரும் சொல்ல ஆரம்பித்திருக்கிருர்!

ஆனுல், அவர் இவ்வளவு கஷ்டப்பட்டு, மென்று விழுங்கிக் கொண்டு, இந்த சால்ஜாப்பைக் கூறியிருக்க வேண்டியதில்லை. அவருடைய கொள்கை எப்படிப்பட்டதா யிருக்கு மென்பது ஊகிக்க முடியாத பிரமாத விஷயமுமல்ல.

சொன்னபடி நடப்பது, போட்ட உத்தரவை அப்படியே நிறை வேற்றி வைப்பது, இவை யெல்லாம் ராணுவத்திலுள்ளவர்களின்



ஒழுக்க முறையாகும். இந்த முறையில் தேர்ச்சி பெற்றவரே இந்த வேவல் துரை. இவரை வைஸராய்ப் பதவிக்கு சர்ச்சிலும், அமெரியும் தேர்ந்தெடுத்ததி லிருந்தே இவர் இங்கே வந்து சாதித்துவிடப் போகும் விஷயம் எப்படி யிருக்கு மென்பதைச் சொல்ல வேண்டியதே யில்லை.

ஆனுல், வேவல் துரை ஒரு ராணுவ நிபுணராக இருந்திருக்கிறபடியால், யுத்த வெற்றிக்குப் பொது ஜனங்களின் நல்லெண்ணம் எவ்வளவு முக்யமான தென்பதை உணர்ந்திருப்பா ரென்றே கருதப்பட்டது. பர்மா, மலேயா முதலிய இடங்களில் ஏற்பட்ட தோல்விக்கு அங்குள்ள பொது ஜனங்களின் நல்லெண்ணத்தை சம்பாதிக்காததும் ஒரு முக்யமான காரணம் என்று அநேக ராணுவ நிபுணர்களே ஒப்புக் கொண்டிருக்கிருர்கள். இவர்களைப் போலவே, வேவல் துரைகூட முன்பு ஒரு தடவை யுத்த வெற்றிக்குப் பொது ஜன ஆதரவும் இன்றியமையாத தென்று கூறி யிருக்கிருர். எனவே, ஜப்பானை எதிர்த்து முழு வெற்றி பெறுவதற்கு இந்திய அரசியல் நெருக்கடியும் இதனுல் ஏற்பட்டிருக்கும் பொது ஜனங்களின் அதிருப்தியும் எவ்வளவு பாதகமாக இருக்கிற தென்பதையும் வேவல் துரை நன்கு உணர்ந்திருக்க வேண்டும்.

ஆனுல் அவ்வாறு அவர் உணர்ந்ததற்கு அடையாளமாக இன்று வைஸராய் என்ற முறையில் அவர் பேசியதில் ஒரு வார்த்தை கூடக் காணப்பட வில்லை. அதற்கு பதிலாக அரசியல் நெருக்கடியை அப்படியே வளர விட்டுக் கொண்டு யுத்தத்தை முடிக்கலாம் என்ற விபரீத வாதமே நிறைந்திருக்கின்றன.

அரசியல் நெருக்கடியானது ஒத்திப் போட்டு விடும்படியாக அவ்வளவு சிறிய விஷய மென்ருல் அதை இப்போதே ஏன் தீர்த்து வைத்துவிடக் கூடாது? இதற்கு முதற் படியாகத் தலைவர்களை உடனே ஏன் விடுதலை செய்துவிடக் கூடாது? அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று, நாட்டில் ஏன் தேசீய சர்க்கார் அமைக்கக் கூடாது? இந்த விஷயங்கள் எல்லாம் தான் ஒத்திப் போடும்படியான சிறிய விஷயமாகத் தோன்றுகிறதே!

உண்மை யென்ன வென்ருல், இந்த அரசியல் நெருக்கடி விஷயத்தை வேவல் முதலியவர்கள் வெளிப்படையாக அலட்சியம் செய்தாலும், உள்ளூரப் பெரிய விஷயமாகவே கருதுகிருர்கள்.

அதாவது அதிகாரத்தை விட்டுக் கொடுத்தால் தான் அரசியல் நெருக்கடி தீரு மென்பதை அவர்கள் அறிந்தே யிருக்கிருர்கள்.

ஆனுல் ஏகாதிபத்தியப் பேராசையின் காரணமாக இதைச் செய்வதற்கு அவர்களுக்கு மனம் வரவில்லை. இதனுலேயே, இந்த நெருக்கடி விஷயத்தில் இவ்வளவு தூரம் வேவல் முதலியவர்கள் மழுப்புவதையும், தட்டிக் கழித்து வருவதையும் பார்க்கிருேம்.

எனவே, யுத்தத்தில் வெற்றி பெற வேண்டுமானுல், அதற்கு முதலில் செய்ய வேண்டிய காரியம் அதிகாரம் வகிப்பவர்கள் தங்களுடைய ஏகாதிபத்தியக் கொள்கையைத் தான் மாற்றிக் கொள்ள வேண்டும். இதை மாற்றிக் கொள்ளாத வரையில், எதிரியைத் தோற்கடிப்பதோடு இந்த யுத்தமும் ஓய்ந்து விடப் போவதில்லை. திரும்பத் திரும்ப யுத்தங்கள் தோன்றிக் கொண்டேதான் இருக்கும்!




### பிரதம மந்திரிக்கு ஜுரம்

பிரிட்டனில் சில நாட்களாகத் தாண்டவமாடும் ஜுரம் எப்படியோ கடலையும் தாண்டிப் போய் மூவல்லரசு மகா நாட்டிலிருந்து வெற்றியுடன் திரும்பிவரும் பிரதம மந்திரி சர்ச்சிலை அணுகி, "நீங்களும் ஆங்கிலேயர் தானே?" என்று கூறி, அவரையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டது! மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில் வந்து கொண்டிருக்கும் பொழுதே அந்த ஜுரம் அவரைப் பற்றிக் கொண்டு விட்டது.

இந்தச் செய்தியைக் கேட்டுப் பலர் பல விதமான ஊஹங்கள் கூற ஆரம்பித்தனர். "அவர் உடம்பு சீக்கிரம் குணமாகாதென்றாலும், அல்லது குணமானாலும் அவர் உடனேயே தமது உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ள முடியாதாகையால் தாற்காலிகமாக வேறொருவரைப் பிரதமமந்திரியாகத் தேர்ந்தெடுக்கக் கூடுமென்றும்" சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறின. வேறு சில பத்திரிகைகள் பிரிட்டிஷ் மந்திரி சபையிலுள்ள ஒவ்வொருவர் குணாதிசயங்களையும் தகுதியையும் சீர்தூக்கி ஆராயத் தொடங்கின. லார்ட் ஹாலிபாக்ஸ் லாயக்கில்லை; மாரிஸனோ மட்டம்; ஆட்லிக்கு ஆழம் போதாது—என்று இப்படியெல்லாம் அவர்கள் தீர்ப்பைப் பார்த்த பொழுது, "ஏது, சர்ச்சில் ஸ்தானத்துக்கு யாரையாவது போட்டே தீருவார்கள் போலிருக்கிறதே!" என்று நினைக்கத் தோன்றியது. ஆனால் இவர்களெல்லாம் எதிர் பார்த்ததற்குச் சற்று சீக்கிரமாகவே சர்ச்சில் குணமடைந்து வருகிறார் என்று தெரிகிறது. ஆனால் சில நாட்களாவது அவர் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டியிருக்குமென்று கருதப்படுகிறது.

என்ன இருந்தாலும் மூவல்லரசு மகாநாட்டை முடித்த பிறகே அவர் நோயை வரவழைத்துக் கொண்டார் என்பது பற்றி பிரிட்டிஷாருக்கு அவரிடமிருந்த மதிப்பு இன்னும் அதிகரித்திருக்கிறது.

### முரட்டுத்தனம்!

எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பது போல் சர்க்கார் மதுவிலக்கை ரத்து செய்ததோடு அதைக் கண்டித்துக் கூட்டங்கள் போடக் கூடாதென்றும் அங்கங்கே தடை விதித்து வருகின்றனர். மது விலக்குக்குப் போதிய ஆதரவு பொது ஜனங்களிடையே காணவில்லை என்று சர்க்கார் கூறியிருக்கிறார்களல்லவா? அதனால் சர்க்கார் செய்கையைக் கண்டித்து இப்பொழுது ஒவ்வொரு இடத்திலும் நடக்கும் கிளர்ச்சியையும் ஆர்ப்பாட்டத்தையும் பார்த்தால் சர்க்காருக்கே பயமாக இருக்கிறது போலும்! ஆனால் தவறு செய்யும் விஷயத்தில் சர்க்கார் முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்பதை நாம் அடிக்கடிப் பார்த்திருக்கிறோம். அதற்கு பதிலாகத் தங்கள் தவறை மேலும் மேலும் தவறுகளால் மறைப்பதே அவர்கள் வழக்கமாயிருக்கிறது. ஆகையினால் தான் பொது மக்கள் இப்படிக் கூட்டம் கூட்டமாக ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் கூடி மதுவிலக்கை ஆதரிப்பதை சர்க்கார் விரும்பவில்லை. அதற்காகவே இம்மாதிரி கூட்டங்களுக்குத் தடை உத்தரவு போடுகிறார்கள். அரசியல் சம்பந்தமோ கட்சி பேதமோ இல்லாத மதுவிலக்கை ஒழிப்பதில் சர்க்காருக்குள்ள முரட்டுத் தனத்தைச் சொல்லி முடியாது!



வருகிறது. ஜெனரல் மாண்ட்கோமெரி ஆர்ட்டோனாவைச் சுற்றிக் கொண்டும் துருப்புகளைத் தள்ளிக் கொண்டும் போகிறார். பெஸ்காரா இன்னும் இருபது மைலில் இருக்கிறது. ஐந்தாவது சைன்யமும் ஸான் பீட்ரோவைப் பிடித்துக் கொண்டு, எதிரியின் மாரிக் கால அரணைத் துளைத்து வருகிறதாம். காஸினோ மலைப் பிரதேசங்களில் பெரும் போர் தொடங்கி யிருக்கிறது.

### பஸிபிக் விஷயங்கள்

அமெரிக்கப் படைகள் நியூ பிரிட்டனில் அராவே தீபகற்பம் பூராவையும் கைப்பற்றிக் கொண்டு, மேலும் பாவி வருகின்றன.

நியூகினியிலும் ஹூவான் தீபகற்பத்தில் நேசப் படைகள் ஸாங்கோ என்ற நதியைக்கடந்ததாகவும் சிறிது முன்னேற்றம் செய்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

### தென்கிழக்கு ஆசிய அரங்கம்

பிரிட்டிஷ் – அமெரிக்க விமானப் படைகள், சௌகரியத்தை உத்தேசித்து ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கின்றன. கெய்ரோ மகாநாட்டிலேயே இந்தத் தீர்மானம் செய்யப்பட்டதாம். பர்மாவுக்குள் பூதிடாங்கிலிருந்து மூன்று மைல் வடக்கே நேசப் படைகள் நுழைந்திருக்கின்றன. ஜெனரல் லூயி மவுண்ட் பேட்டன் அரக்கான் முனையையும் பர்மாவுக்குள் சிறிது தூரமும் சுற்றி விட்டுத் திரும்பினார்.

ஒரு பிரசங்கத்தில் ஆர். ஏ. எப். படை ஜெர்மனியில் தாக்குவதைக் குறிப்பிட்டு, "ஹாஸ்யச் சுவையுடன், ஜெர்மன் அறிக்கை உண்மையைக் கூற வேண்டுமானால், 'இன்று ஆர். ஏ. எப். விமானங்கள் ஜெர்மனி மீது வந்தன. ஒரு நகரத்தைக் காணவில்லை' என்றுதான் இருக்கும்" என்றார்.

### இதர செய்திகள்

பெர்லின் மீது ஒரே தடவையில் 1500 டன் பிரிட்டிஷ் குண்டுகள் விழுந்தன. பிராங்க்பர்ட், ஆக்ஸ்பர்க், மான்ஹீம், இன்ஸ்பிரக், லட்விக்ஷேவன் எங்கும் குண்டு வீச்சு; பிரெமனில் மட்டும் சற்றுப் பலமான தாக்குதல்.

யுகோஸ்லேவியாவில் போர் செய்து கொண்டு புது சர்க்கார் அமைத்திருக்கும் மார்ஷல் டைட்டோவுக்கு நேச சர்க்கார், 'கமாண்டர்' பட்டம் அளிக்கிறது. யுகோ மன்னர் பீட்டரும் அவர் சர்க்காரை ஒப்புக் கொள்வார் என்று தெரிகிறது.

சிட்டகாங்கில் ஒரே ஒரு ஜப்பானிய விமானம் குண்டுகளைத் தூவிற்றும். சேதம் சொற்பம் தானாம்.

### வியாக்யானம்



# துக்கடா

● "யுத்தத்துக்குப் பிறகு அச்சு நாடுகளுக்குப் 'பறக்கும் உரிமை' கொடுப்பதில்லை என்று சர்ச்சில் - ரூஸ்வெல்ட் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது."

— தினசரி.

சோற்றுக்குப் பறக்கும் உரிமை கூடவா இல்லை?

● "அகில இந்திய ரேடியோ காரியாலயத்திலிருந்து இரண்டு பிடில்கள் காணமல் போயிருக்கின்றனவாம்."

எந்த வித்வானை 'ஆயுத பரிஹரணம்' செய்ய இந்தக் காரியம் நடந்ததோ என்று சிலர் சந்தேகிக்கிறார்களாம்!

● "யானைக்கு விஷம் வைத்துக் கொல்ல முயன்றதாகக் கும்பகோணத்தில் ஒருவன் கைது செய்யப்பட்டிருக்கிறான்."

விஷம் தின்று அது செத்துப் போனவுடன் மேல் துண்டில் மறைத்துக் கொண்டு போய் விடலாமென்று அவன் நோக்கமாயிருக்கலாமோ!

● "கன்னத்தில் போட்டுக் கொள்ள ருமேனியா தயாராக இருக்கிறது."

— ஒரு நிருபர்.

"அவசியமில்லை, நாங்கள் வந்து அதில் அறைகிறோம்" என்று நேச வட்டாரத்தில் பேச்சு நடக்கிறதாக நமது நிருபர் சரடு விடுகிறார்.

● "எலெக்டிரிக் விளக்கைப் போட்டுக் கொண்டு தூங்கினால் தலைவலி உண்டாகும்."

—ஒரு டாக்டர்.

முக்யமாக, எலெக்டிரிக் கம்பெனி 'பில்' பெரிதாக வரும் போது தானே?

● "சிறந்த அறிவாளிகளுக்கு ஏன் அடிக்கடி ஞாபக மறதி ஏற்படுகிறது?" என்று ஒருவர் கேட்கிறார்.

நமக்கு ஞாபகமில்லை!



"தீவிரமா உழைச்சதாலேயே சர்ச்சிலுக்கு ஜுரம் வந்ததுன்னு சொல்லிக்கிறாளே, நீங்க கவனிச்சேளோ?"

"கவனிக்காமே என்ன! இது தெரிஞ்சுதானே மிதமாகவே நாம்ப காரியங்களை செய்துண்டிருக்கோம்?"



# ஆடல் பாடல்



## சங்கீத வித்வத் சபை விழா

உத்தியோகம் செய்ய வடக்கே போயிருந்த நண்பர் ஒருவர் சென்ற வாரம் சென்னைக்கு வந்து சேர்ந்தார். வந்தவர் பட்டணத்தின் காற்றை அதிகமாக அநுபவிக்க ஆரம்பித்துவிட்டார். "ராகங்கள், ஸ்வரங்கள் எல்லாம் இப்போது சென்னையில் அலை அலையாக வந்து காற்றில் மிதந்து கொண்டிருக்கிறதே!" என்றார். எங்கேயோ வாசற் கதவு திறந்த சத்தம் கேட்டு, 'என்ன வாசஸ்பதி மாதிரி ஒலிக்கிறதே' என்று கேட்டார். ஜன்னலைத் திறந்தவர் 'ஜாலவாராளி சாயையாக சத்தமிடுகிறதே' என்றார். பிறகு அப்பளாம் பொரிக்கும் சத்தத்தைக் கேட்டு, 'வனஸ்பதி வாடை வருகிறதே' என்றார். இப்படி எந்த ஓசையைக் கேட்டாலும் சங்கீதமே தொனித்துக் கொண்டிருக்கிறது என்று அவர் சொன்னதில் அர்த்தம் உண்டு. இப்பொழுது சென்னை நகரத்தில் ஒரே சங்கீத மயமாயிருப்பதைத் தான் அவர் இப்படிக் குறிப்பிடுகிறாரென்று தெரிந்தது.

இந்த வருஷம் சென்னையில் ஐந்து சங்கீத விழாக்கள் இந்தக் கிறிஸ்துமஸ் ஸீஸனில் நடக்கின்றன. மியூஸிக் அகாடமியார், பைன் ஆர்ட்ஸ் சொஸைடியார், தமிழ் இசை சங்கத்தார், அடையாறு கலாக்ஷேத்ரக்காரர்கள், தியாக ப்ரும்ம பக்த ஜன சபையார், இவர்களெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு இந்த வருஷம் சங்கீத விழாக்களை நடத்துகிறார்கள்.

வழக்கம்போல் சங்கீத வித்வத் சபையார் தங்கள் சங்கீத மகா நாட்டுக்கு ஒரு சங்கீதத் தலைவரையும், திறப்புவிழாவுக்குப் பிரசித்தி பெற்ற ஒரு பொதுத் தலைவரையும் தெரிந்தெடுத்தார்கள். குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட நேரத்தில், அதாவது சென்ற புதன் கிழமை மாலை உலகப் பிரசித்தி பெற்ற ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் சங்கீத மகா நாட்டைத் திறந்து வைத்தார்.

அவரை அகாடமி சார்பாக வரவேற்ற ஸ்ரீ சுப்ப ராவ், சங்கீதத்துக்கும் வேதாந்தத்துக்கு முள்ள ஓர் ஒற்றுமையைக் குறிப்பிட்டு, 'ஆகையினால் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் இந்த மகா



ஸர் எஸ். ராதாகிருஷ்ணன்

நாட்டைத் திறந்து வைப்பது பொருத்தம்' என்று கூறினார். சமீபத்தில் தென்னாட்டு சங்கீத உலகத்தில் ஏற்பட்டிருக்கும் விவாதம் அசாதாரணமானதல்லவென்றும், ஏதோ உத்ஸாகத்தில் சிலர் சில கருத்துக்களுக்கு இரையாகி விடுவது இயற்கைதானென்றும், நாளடைவில் இப்படி வழி தவறிப் போகிறவர் சங்கீதத்துக்கு எழுத்தை விட ஒலிதான் பிரதானமென்பதை உணர்ந்து விடுவார்களென்றும் வரவேற்புப் பத்திரத்தைப் படித்து முடித்தார்.

வரவேற்புப் பிரசங்கத்திலே வேதாந்தத்துக்கும் சங்கீதத்துக்குமுள்ள ஒற்றுமையைக் குறிப்பிட்டுப் பேசப்பட்டதால் ஸர் ராதாகிருஷ்ணன் அதையே ஆதாரமாக வைத்துக் கொண்டு தமது பிரசங்கத்தைச் செய்தார். சங்கீதத்தின் லட்சியமும் வேதாந்தத்தின் லட்சியமும் எப்படி ஒன்றுபட்டதென்றும், இரண்டும் எப்படி மனிதனை வியவஹார உலகிலிருந்து அந்தரங்கமான பேரின்பத்தில் லயித்திருக்கும்படி செய்கின்றனவென்றும் ரஸிகர்கள் தான் இந்த வேதாந்திகளென்றும் கூறி, சபையோர்களை வேதாந்த லோகத்துக்கே இழுத்துக்கொண்டு போய் விட்டார். இதைத் தொடர்ந்து அவர், உன்னத நடையில் சங்கீதமானது ஜாதி, மதம், பாஷை இவைகளைக் கடந்தது என்று கூறியபோதுதான் சபையோர்கள் இந்த உலக ஞாபகம் பெற்று, இந்த உலக வழக்கப்படி கரகோஷம் செய்தனர்.

பிறகு மகாநாட்டுக்குத் தலைவராக ஸ்ரீ பல்லடம் சஞ்சீவிராவ் வந்தமர்ந்தார். அவரும் அவருடைய பிரசங்கத்தைப் படிக்கையில் மியூஸிக் அகாடமி செய்துள்ள சேவைகளை வரிசையாகக் கூறி, இன்னும் முன்னேற்றத்துக்காகச் செய்ய வேண்டிய காரியங்களையும் எடுத்துச் சொன்னார். கடைசியில் சங்கீதத்தின் சிறப்பையும் கூறி, பிரசங்கத்தை முடித்தார். அதற்குப் பிறகு ஸ்ரீமதிகள் லட்சுமி, சரஸ்வதி ராம சுப்பனின் கச்சேரியுடன் அன்று வைபவம் இனிது முடிந்தது. மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் நடக்கின்ற இந்த வித்வத் சபையாரின் சங்கீத விழா இப்படியே தொடர்ந்து வெகு விமரிசையாகவே நடக்கும் என்பதில் சந்தேகமில்லை.



பல்லடம் சஞ்சீவி ராவ்

## பட்டம் பெற்றவர்கள்

கலைஞர்களுக்குப் பட்டங்கள் வழங்குவதற்கு ஏதாவது ஒரு பொது ஸ்தாபனம் இருப்பது தான் நன்றாக இருக்கும். இங்கிலாந்தில் இம்மாதிரி கலை ஸ்தாபனம் அதாவது 'ராயல் அகெடமி' இருந்து வருகிறது. அதனால் ஒருவருக்கு "R. A" என்ற



பட்டம் கொடுக்கப்பட்டால் எல்லோரும் பட்டம் பெற்றவரை ஒரு தரம் வியந்தே பார்க்கிறார்கள்.

வழங்கப்படும் பட்டத்துக்கும் அதைப் பெறுபவர்களுக்கும் கௌரவம் ஏற்பட வேண்டுமானால், ஒரு மத்திய கலை ஸ்தாபனம் தான் பட்டங்களையும் விருதுகளையும் அளிக்க வேண்டும்.

நம் நாட்டிலோ கலை விஷயத்தில் அத்தகைய ஸ்தாபனங்கள் இல்லை. ஆகவே பட்டங்களுக்கு அம்மாதிரி கௌரவம் ஏற்படுவதுமில்லை. யாருக்கு வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் பட்டங்கள் கொடுக்கலாம் போலிருக்கிறது! இந்த நிலைமை சீர்பட வேண்டுமல்லவா?

இப்பொழுது சங்கீத வித்வத் சபையார் இருக்கிறார்களே, அவர்கள் மற்ற சங்கீத சபைகளையெல்லாம் அங்கத்தினர்களாக வைத்துக் கொண்டு ஒரு 'மத்ய அகாடமி'யாக விளங்கி, தகுந்த பட்டங்களை வழங்கி வரலாம். ஆனால் அப்படி என்ன காரணத்தாலோ நடக்கவில்லை. மத்ய சபை ஒன்றும் சரியாக இல்லாததினால் ஆங்காங்கு பல்வேறு சங்கீத ஸ்தாபனங்கள் பட்டங்களை அளித்து வருகின்றன.



ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை

தென்னாட்டில் புராதனக் கலையான பரத நாட்டியம் இன்று உயிரோடிருப்பதற்கு மட்டுமல்ல, இன்று அது செழித்து வளர்ந்து வருவதற்கும் காரணஸ்தர்களாயிருப்பவர் பந்தநல்லூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள்தான். பதினைந்து வருஷங்களுக்கு முன்பு இந்தக் கலை பகிஷ்கரிக்கப்பட்டு, நசித்து விடுமென்றிருந்த தருணத்தில் சில தகுந்த சிஷ்யர்களைக் கொண்டு அதை உயிருள்ள கலையாக ஆக்கியவர் இவரே. அத்தகைய ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு **நாட்டிய கலாநிதி** என்ற பட்டத்தை எழும்பூர் ஜகந்நாத பக்த சபையினர் சென்ற ஞாயிற்றுக் கிழமை அளித்தார்கள்.

இப்பொழுதெல்லாம் பட்டமளிக்கத் தகுந்தவர் 'டைகர்' தான் என்று அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. ஆகையினால் ஜகன்னாத பக்த சபையின் சார்பாகவும் அவரே ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு **நாட்டிய கலாநிதி** என்ற பட்டத்தையும், அவர் சிஷ்யர் சொக்கலிங்கம் பிள்ளைக்கு **நாட்டிய விசாரதா** என்ற பட்டத்தையும் வழங்கினார். சென்னையில் இம்மாதிரி ஒரு கூட்டம் என்றால் அதற்கு யார் தலைமை வகிப்பார்கள் என்பதைக் கண்ணை மூடிக் கொண்டே சொல்லி விடலாம். அவர் கார்ப்பரேஷன் கமிஷனர் ஸ்ரீ புல்லா ரெட்டிகாரு. அவரே இந்த விழாவுக்கும் தலைமை வகித்தார். இந்த விழாவில் பெரிய கலை ரஸிகர்களான பலர் பேசினார்கள். ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் ரஸமாகப் பேசினார். டாக்டர் சீமா சிரிக்கப் பேசினார். எஸ். வி. வி. குலுங்கப் பேசினார். சாம்பமூர்த்தி சம்பிரதாயம் போல் பேசினார். இத்துடன் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் சிஷ்யராகிய உலகப் பிரசித்தி பெற்ற ராம்கோபால் தமது சகாக்களுடன் சிறிது நேரம் பரத நாட்டியம் செய்து குருவின் திறமையை வெளிப் படுத்தியதும் ஜகந்நாத சபையின் நாட்டியப் பள்ளி சிறுமிகள் தங்கள் உற்சாகத்தை வெளிப் படுத்தியதும்

விழாவுக்குப் பொருத்தமாகவே இருந்தன.

ஸ்ரீ நாட்டிய கலாநிதி இன்னும் பல காலம் இருந்து இன்னும் அநேக பிரபல சிஷ்யர்களைத் தயாரித்து, தமிழ் நாடெங்கும் நாட்டியமயமாகச் செய்வாராக.

சென்ற 19-ந் தேதி பட்டமளிப்பதற்கே ஒரு சுப தினம் போலிருக்கிறது. ஏனெனில் அன்றைக்குத் தஞ்சாவூரில் மதுரை மணி ஐயருக்கு கான கலாதரர் என்ற பட்டம் வழங்கினார்களாம்.

கர்நாடக சங்கீதத்துக்கு இருப்பிடமும் உற்பத்தி ஸ்தானமும் தஞ்சாவூர் தானகையால் அவர்கள் சரியான ஒருவரைப் பொறுக்கி எடுத்துப் பட்டமளித்ததில் ஆச்சரியமில்லை. இப்பொழுது கர்நாடக சங்கீதத்தை தனியானதும் இனிமையானதுமான உயர்ந்த பாணியில் நமக்கு அளிப்பவர் ஸ்ரீ மதுரை மணி.

முன் காலத்தில் சங்கீதத்தை ஆதரித்து போற்றி வந்தவர்கள் ராஜ வம்சத்தினர். அதனால் அந்தப் பரம்பரையைச் சேர்ந்த ஒரு யுவராஜா இந்தப் பட்டமளிப்பு கமிட்டிக்கு தலைமை வகித்தது மிகவும் பொருத்தமாகும். இந்த விழாவுக்குத் தலைமை வகித்தவர் ஜில்லா ஜட்ஜ் அனந்த நாராயணய்யர், ஐ. ஸி. எஸ். இப்போது ஐ. ஸி. எஸ். காரர் என்றாலே அவர் ஒரு சங்கீத ரஸிகர் என்ற அபிப்பிராயம் இருந்து வருகிற தல்லவா? தஞ்சாவூரில் எங்கே சங்கீதக் கச்சேரி என்றாலும் ஸ்ரீ அனந்தநாராயணய்யரைக் காணலாம். சங்கீதத்தில் அவருக்கு அவ்வளவு உத்ஸாகம். பொது ஜனங்களிடையே உத்தியோக முறையில் கியாதி பெற்றிருப்பதுடன், சங்கீத ரஸிகர்களிடையேயும் அவர் மதிப்புப் பெற்றிருக்கிறார். ஆகவே, இந்த விழாவுக்கு இவர் தலைமை வகித்ததில் வியப்பில்லை.

இந்த பட்டத்தைப் பெற்ற கான கலாதரர் மதுரைமணி மேன்மேலும் நமக்கு சங்கீத விருந்தை அளிக்க நீடூழி வாழ்ந்திருக்க வேண்டுமென்பதே எல்லா ரஸிகர்களுடைய பிரார்த்தனையாகும்.

## ரஞ்சன் கமலா நடனம்

உதயசங்கர், கோபிநாத் முதலியவர்கள் சென்னைக்கு வந்து நடனக் கச்சேரிகள் செய்து விட்டுப் பெயரையும் புகழையும் அடித்துக் கொண்டு போனபோதெல்லாம், "இம்மாதிரி தமிழ் நாட்டிலும் ஒரு கோஷ்டி இருந்தால் எவ்வளவோ பெருமையா யிருக்குமே!" என்று அநேக ரஸிகர்கள் பெருமூச்சு விட்டதுண்டு. அந்தக் குறையை இப்போது நிவர்த்தி செய்துவிட்டார் ரஞ்சன். உயர் குடும்பத்தைச் சேர்ந்த இவர் தம்பதி சகிதமாக நாட்டியத்தையே தொழிலாக மேற்கொண்டு, மேடைக்கு வந்து விட்டார். சென்ற ஞாயிற்றுக்கிழமை பைன் ஆர்ட்ஸ் அகாடமியின் ஆதரவில் நடந்த அவருடைய நடனங்களைப் பார்த்தவர்களெல்லாரும் அவரை வியந்தனர்.

அன்று ரஞ்சன் தம்பதிகளின் நடனங்கள் சபையோரின் மனதைக் கவர்ந்ததற்கு முக்கிய காரணம், நடனக் கலைக்குத் தேவையான முக்கிய யோக்யதாம்சங்களெல்லாம் அவர்களிடம் அமைந்திருந்தது தான். இருவரும் நல்ல உயரம். இருவருக்கும் நடனத்திற்கேற்ற ஒல்லியான தேக அமைப்பு. அதோடு வசீகரமான முகத் தோற்றம். இயற்கையாக அமைந்திருந்த இந்த அம்சங்களைத் தவிர, அவர்களிடம் அற்புதமான அபிநயத் திறமையும் இருந்தது. பரத நாட்டியம், கதக்களி முதலிய நர்த்தனங்களில் அவர்களுக்கு நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் ஏற்பட்டிருந்தன.

"ஆனால் இன்னும் கொஞ்சம் அனுபவம் ஏற்பட்ட பிறகு அவர் இந்த நடன கோஷ்டியை ஆரம்பித்திருந்தால் இன்னும் அதிக கவர்ச்சியுள்ள முறையில் நடனங்களை அமைத்திருக்கக் கூடும்" என்று சிலர் அன்றைய தினம் அபிப்பிராயப் பட்டார்கள் என்பது நமக்குத் தெரியும். "போகப் போகத் தன்னால் அனுபவம் ஏற்பட்டு விடுகிறது" என்றுதான் அதற்கு நாம் பதில் சொல்லுவோம். எடுத்ததுமே எல்லாரும் பிரமாத வெற்றியை அடைந்து விடுகிறார்களா?

கூடிய வரையில் அன்றைய நிகழ்ச்சி உயர்தரமாகவே இருந்தது. பரத நாட்டியம், சிவ நடனம், அப்சரஸ் நடனம், பஞ்சாரா நடனம், ராதா - கிருஷ்ண நடனம், 'கருடன்' 'செம்படவர்கள்' 'தெருப் பாடகன்' என்று விதவிதமாகச் சுமார் பத்துப் பன்னிரண்டு ஸ்வாரஸ்யமான நடனங்கள் அதில் அடங்கி யிருந்தன. பொருத்தமான உடைகளும் சந்தர்ப்பத்திற்கேற்ற பக்க கீதங்களும் சேர்ந்திருந்தது வசீகரமாயிருந்தது.

இந்த சந்தர்ப்பத்தில் நமக்குத் தோன்றும் இரண்டொரு சில்லறை விஷயங்களை மட்டும் சொல்லி விடுவோம். அன்றைய தினம், பரத நாட்டியத்திற்கே ரொம்பவும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருந்ததால், சபையோரின் பொறுமையை ஓரளவுக்கு அது சோதிப்பதா யிருந்தது. பரத நாட்டியப் பகுதியைச் சற்றுக் குறைத்திருக்கலாம் என்றே பலர் நினைத்தார்கள். இன்னொரு விஷயம். ஒரு காட்சிக்கும் இன்னொரு காட்சிக்கும் இடையில் இனிய குரலுள்ள



கமலா, ரஞ்சன்

யாரைக் கொண்டாவது பாடச் சொல்லி யிருந்தால் ஜனங்கள் ரொம்பவும் அமைதியா யிருந்திருக்கக் கூடும். கடைசியாக இன்னொரு முக்கிய விஷயம். மேடையின் மீது என்னென்ன நடனங்கள் நடந்து கொண்டிருந்தன என்று தெரியாமல் அன்று சபையோர்கள் ரொம்பவும் சிரமப்பட்டார்கள். அவைகளைப் பற்றிய விவரங்களை ஒலி பெருக்கியின் மூலம் அறிவித்தவர் இங்கிலீஷில் அறிவித்ததால், அநேகருக்கு அது புரியவில்லை. தமிழில் சொல்லி யிருந்தால் ரொம்பவும் உபகாரமா யிருந்திருக்கும். அல்லது, விவரங்கள் அடங்கிய நோட்டீசுகளை எல்லாருக்கும் வழங்கி யிருந்தாலும் நன்று யிருந்திருக்கும். நிற்க.

"போதிய அநுபவம் பெற்ற பின்பு இந்த ரஞ்சன் நடன கோஷ்டி வட நாட்டுக்கு சென்று கீர்த்தியை யடையும் என்று சிலர் ஜோஸ்யம் கூறி யிருப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கலா

# சௌந்தரம்மாள்

## 25

**எஸ்.வி.வி.**

எங்காத்துக்காரர் எப்பொழுதுமே அப்படித்தான். செய்கிறதைச் செய்து விடுகிறது; நான் மனஸ்தாபப் பட்டால், கடைசியில் நான்தான் அசடா யிருக்கிற மாதிரி பேசுகிறது.

எனக்கு மனதில் வெறுப்பு ஏற்பட்டு ஊருக்குப் போகிறேன் என்றேன்; அதற்கு என்ன பதில் சொல்லுகிறது?

"ஆத்துக்காரரைக் கண்டால் பிடிக்கவில்லை என்று போகப் போகிறாய்?" என்று கேட்கிறது? கோபமா இருக்கிற குழந்தையை இன்னும் சீண்டி விட்டு வேடிக்கை பார்க்கிற மாதிரி விளையாட்டுத்தனமாய்ப் பேசினால் நமக்கு இன்னும் எரிச்சல் வருமா வராதா? நான் என்ன, குழந்தையா?

"ஆமாம், அதற்காகத்தான்!" என்றேன், விறைப்பாய்.

"ஆமண்டியான் குறியும் குணமுமா யிருந்தால் நீ ஊருக்குப் போக மாட்டாய்?"

நான் வாயைத் திறக்க வில்லை. இப்படி விளையாட்டுத்தனமாய்ப் பேசுகிறவரிடத்தில் என்ன பேச்சு?

"உனக்கு அவ்வளவு வெறுப்பு ஏற்பட்டு விடும்படியாக உன் ஆமண்டியான் செய்து வரும் தப்புதான் என்னவோ?"

நான் ஒரு பதிலையும் சொல்ல வில்லை. அந்த இடத்தை விட்டுப் போகக் கிளம்பினேன்.

"இங்கே வாயேன்; இந்தச் சண்டையை ஒரு விதமாய் இப்பொழுதே தீர்த்து விடலாமே! என்ன தப்பு என்றுதான் சொல்லேன்?"

"ஒரு தப்பு மில்லை. எனக்கு உடம்பு சரியா யில்லை. அதற்காகத்தான் ஊருக்குப் போய்ப் பத்து நாள் இருந்து விட்டு வரலாமென்றிருக்கிறேன்" என்றேன்.

"உடம்பு சரியா யில்லையா, மனது சரியா யில்லையா?"

"இரண்டுந்தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!"

"மனது ஏன் சரியா யில்லை?"

"என்னமோ சரியா யில்லை!"

"ஆத்துக்காரர் சிகரெட்டு குடிக்கிறார் என்று?"

நான் பதில் சொல்ல வில்லை.

"நான் செய்யும் தப்பு இதெல்லாம் அல்ல, அம்மா. பேச்சுத் துணைக்கு ஒருத்தரும் இல்லாமல் நாள் நாளாய் உன்னை இவ்வளவு பெரிய வீட்டில் கட்டிப்போட்டமாதிரி வைத்துக் கொண்டிருந்ததால் உனக்குப் பயித்தியம் பிடித்த மாதிரி ஆய் விடுகிறது. பொழுது போக்குக்கு வழி யில்லாமல் மனது எதை எதையோ நினைக்க ஆரம்பிக்கிறது. இல்லாத துக்கத்தை எல்லாம் கற்பித்துக் கொள்ளுகிறது. நம்ம வீட்டில் ஒரு குடித்தனம் வைத்து விட்டால் உனக்குச் சௌகரியமா இருக்கும் என்று ஒரு குடித்தனத்தை ஏற்பாடு செய்திருக்கிறேன். இன்னொரு நல்ல சமாசாரத்தை உனக்குச் சொல்ல வேண்டுமே; விட்டல் ராவுக்கு அனந்தபூரில் வேலையாய் விட்டது. வேலையை ஒத்துக் கொள்ள இன்னும் ஒரு வாரத்தில் போகிறான்" என்றார்.

"ஒழியட்டும்" என்றேன்.



"விட்டல் ராவைக் கண்டால் உனக்கு ஏன் அவ்வளவு பத்திக் கொள்ளுகிறது?" என்று இடி இடி என்று சிரித்தார்.

"அவருக்கு என்ன வேலை யாச்சுதாம்?"

"ஏதோ வேலை! எடுக்கும் பொழுதே 'எண்பது ரூபாய் சம்பளம். அதிர்ஷ்டசாலிதான். கவர்மெண்டு வேலை!"

"உங்களுக்குப் போய் விடுகிறாரே என்று இருக்கும்?"

"ஏன்?"

"அவர் போய் விட்டால் உங்களுக்கு மொச்சு மொச்சு என்று பேசுவதற்கு யார் ஆள்?"

"சௌந்தரம்மாள்."

"சௌந்தரம்மாள் சிகரெட்டு குடிக்க மாட்டாளே. அதுவும் இருந்தால் தானே குஷி!"

"அவளும் கற்றுக் கொண்டு விடுகிறது."

"அது ஒன்றுதான் குறை. வீட்டில் யாரைக் குடித்தனம் வைக்கப் போகிறீர்களாம்?"

"போர்டாபீஸில் ஒரு கிளார்க்கு. நம்மவர், அய்யங்கார் தான். ரொம்ப நல்ல மனுஷியர்."

"எத்தனை பேர் அவர்கள்?"

"அவர், அவர் அகமுடையாள், அவர் மாமியார் ஒருத்தி கூடவே இருக்கிறாள். அவர் மச்சினி ஒரு பெண். இவ்வளவு தான் என்று நினைக்கிறேன்."



"அவர் அகமுடையாளுக்கு என்ன வயசு இருக்கும்? மச்சினிக்கு என்ன வயசு இருக்கும்?"

"அவர் சின்னவர்தான். அவர் அகமுடையாளுக்கு உன் வயசுதான் இருக்கலாம். அவரைத் தவிர வேறு யாரையும் நான் பார்த்ததில்லை. கீழே சமையலுள்ளையும் உக்கிராண உள்ளையும் நாம் வைத்துக் கொள்ளுகிறது; கீழே மற்ற இடம் பூராவையும் அவர்களுக்கு விட்டு விடுகிறது. மெத்தை பூராவையும் நாம் வைத்துக் கொள்ளுகிறது என்று ஏற்பாடு செய்திருக்கிறேன்."

"எவ்வளவு வாடகைக்கு விட்டிருக்கிறீர்கள்?"

"இருப்பத்தெட்டு ரூபாய்க்கு. முதல் தேதி குடித்தனம் வருவதாய்ச் சொல்லி யிருக்கிறார்கள்" என்றார்.

பொம்மியும், "ஒரு குடித்தனம் வைத்துக் கொள்ளடி ஒத்தாசையா யிருக்கும்" என்று சொன்னாளே; குடித்தனம் வரட்டும்" என்று எனக்கும் சம்மதமாகத்தானிருந்தது.

முதல் தேதி போர்டாபீஸ் கிளார்க் எங்கள் வீட்டுக்குக் குடித்தனம் வந்து சேர்ந்தார். எங்காத்துக்காரர் சொன்னபடி புருஷாளில் அவர் ஒருத்தரும் பொம்மனாட்டிகளில் மூன்று பேரும்தான் இருந்தார்கள்.

அவர் சம்சாரத்திற்கு என் வயது இருக்குமோ, இன்னும் ஒன்றிரண்டு கூட இருக்குமோ, சின்னப் பெண்தான். அவள் தங்கைக்குப் பன்னிரண்டு வயசு இருக்கும்; இன்னும் கலியாணமாக வில்லை; கலியாணத்துக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறதாகச் சொன்னார்கள். இவர்கள் தாயாருக்கு நாற்பத்தைந்து, ஐம்பது வயது இருக்கலாம்; விதந்து; அவர்கள் தென்கலை யானபடியால் அந்தம்மா மயிர் வைத்துக் கொண்டிருந்தாள். புருஷன் பொம்மனாட்டிகள் எல்லோருமே அழகாயிருந்தார்கள்.

அவர்கள் வரும்போது எங்காத்துக் காரர் ஆத்தில் இல்லை. அவர்கள் இடத்தை எல்லாம் காண்பித்தேன். அவர்கள் கூப்பிட்டுக் கொண்டதிலிருந்து அவர் சம்சாரத்தின் பெயர் கோமளம் என்றும், மச்சினி பெயர் லக்ஷ்மி என்றும் ஏற்பட்டது.

தொட்டிலில் ஸரோஜா விடப் பட்டிருந்தது. லக்ஷ்மி குடு குடு என்று ஓடிவந்து, "குழந்தையைப் பாரம்மா, நம்ம பேபி மாதிரியே இருக்கிறது" என்று கத்தினாள். அவள் அக்காவும் அம்மாவும் அங்கே வந்தார்கள்.

"பெண்ணா, பிள்ளையா?" என்றாள் கோமளம்.

"பெண்" என்றேன்.

"என்ன பெயர் வைத்திருக்கிறீர்கள்?"

"ஸரோஜா என்று வைத்திருக்கிறது?"

"என்ன வயசு?"

"எட்டுமாசமாய் ஒன்பதாவது."

"தவழுகிறதா?"

"ஏதோ இப்போதான் கொஞ்சம் தவழுகிறது?"

லக்ஷ்மி குழந்தையைக் கையிலெடுத்துக்கொண்டு சீராட்டினாள். "குழந்தை ரொம்ப அழகாய் இருக்கிறது. எட்டு மாதத்துக்கு நல்ல வளர்த்தியாய்க் கூட இருக்கிறது. சாதம் சாப்பிடுகிறதோ?" என்று அவர்கள் அம்மா கேட்டாள்.

"இன்னும் சாதம் போடவில்லை. புழுங்கலரிசிக் கஞ்சிதான் போட்டுக்கொண்டு வருகிறேன்."

"அதுதான் ரொம்ப நல்லது. புழுங்கலரிசிக் கஞ்சிக்கு சமானம் எதுவுமில்லை. இப்போ புது நாகரிகத்தில் கண்டதைப் போட்டுக் குழந்தைகளைக் கெடுத்து விடுகிறார்கள். நம்ம லக்ஷ்மிக்கு நல்ல பொழுது போதுக்கு அகப்பட்டு விட்டது. குழந்தை என்றால் அவளுக்கு அவ்வளவு ஆசை. கீழே விடமாட்டாள்" என்றாள் அவர்கள் அம்மா. லக்ஷ்மி ஸரோஜாவை உடனே எடுத்துக்கொண்டு விளையாட ஆரம்பித்து விட்டாள்.

"உங்கள் பெண்ணுக்குக் குழந்தை இல்லையோ?" என்று கேட்டேன்.

"இன்னும் இல்லை, அம்மா. பெருமாள் கிருபை இருந்து இனிமேல்தான் உண்டாகவேண்டும்."

"சாந்திக் கலியாணம் ஆய் எத்தனை நாளாச்சுது?"

"ஆறு வருஷம் ஆய்ப் போச்சம்மா. இன்னும் பெருமாள் கிருபை பண்ணவில்லை. உங்காத்துக்கு வந்த முகூர்த்தம் நல்லதாயிருந்து உண்டாகட்டுமே" என்றாள் அவர்கள் அம்மா.

"ஆகட்டுமே" என்றேன்.

அன்று பேசிக் கொண்டிருந்ததிலிருந்து அவர்கள் எல்லோர் பேரிலும் எனக்கு ரொம்பப் பிடிப்பு ஏற்பட்டு விட்டது. (தொடரும்)

# ஐம்பது வருஷங்களுக்கு முன்

வ. ரா.

## 10

பல வருஷங்களுக்கு முன், நான் பம்பாயிலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்தேன். ரயில் மார்க்கமாகத்தான். நான் ஏறிய வண்டியில், ஒரு முஸ்லிம் கனவானும் நானும்தான் இருந்தோம். அவர் உடை மிகவும் கம்பீரமாக இருந்தது. யாரோ வெளி நாட்டு முஸ்லிம் என்று எண்ணி, அவரோடு நான் பேசாமல் இருந்தேன். நான் தமிழன் என்பதைத் தெரிந்து கொண்டு அவர், அழகான பேச்சுத் தமிழில், என்னுடன் பேசத் துவக்கினார்.

'இந்தியாவிலிருக்கும் நாம் எல்லோரும் சுக வாசிகள். நமக்கு, ஜப்பானிலிருந்து அது, ஜெர்மனியிலிருந்து இது, பிரிட்டனிலிருந்து பல பொருள்கள், அமெரிக்காவிலிருந்து சில பொருள்கள் வந்து கொண்டிருக்கின்றன. நமக்கு என்ன குறை? குண்டூசி செய்கிற பொறுப்பும் கஷ்டமும் கூட நமக்குக் கிடையாது. ஆண்டவன் நம்மவர்களைத் தனிப் பிறவிகளாகப் படைத்திருக்கிறார்' என்று அவர் சொன்னார்.

அவர் கிண்டலாகப் பேசுகிறாரா அல்லது உண்மையாகவே அப்படிப் பேசுகிறாரா என்பது தெரியவில்லை. குரல் அவ்வளவு நயமாயிருந்தது! இருந்தாலும், சுகவாசி என்று சொன்னதைக் கேட்டதும், எனக்குக் கோபம் வந்தது. 'என்ன சுகவாசி வாழ்வு வேண்டியிருக்கிறது!' என்று ஆத்திரத்தோடு பேசினேன். 'நீங்கள் ஆத்திரப்பட்டுப் பயனில்லை. தமிழ் நாட்டில், பத்திரங்களின் வாசகம் உங்களுக்குத் தெரியாது. இன்ன ஜாதி, இன்ன மதம், வீட்டுக் குடித்தனம், சுகவாசி என்று தங்கள் தொழிலைக் குறிப்பிட்டிருப்பார்கள்' என்று சிரித்துக் கொண்டு, அவர் பதில் சொன்னார்.

எனக்கு சந்தேகம் உண்டாயிற்று. 'நானும்தான் தமிழ் நாட்டில் இருக்கிறேன். எனக்குத் தெரியாமல், உங்களுக்கு மட்டும் அது எப்படித் தெரிந்தது?' என்று கேட்டேன். 'இதைத் தெரிந்து கொள்வதற்காக, எனக்கு சம்பளம் கொடுத்தார்கள்' என்று சிரித்துக்கொண்டு சொல்லி விட்டு, 'நான் ஜில்லா ரிஜிஸ்ட்ராராக இருந்து, போன வருஷம்தான் பென்ஷனோடு, ரிடயர் ஆனேன்' என்றார்.

ஐம்பது வருஷங்களுக்கு முன், சுகவாசித் தொழில் என்று ஒன்று இருந்தது என்பதைப் பழைய பத்திரங்களைப் பார்த்து, பிறகு சந்தேகம் துளிக்கூட இல்லாமல் தெரிந்து கொண்டேன். என் ஆச்சரியத்துக்கு எல்லையே இல்லை. சுகவாசித் தொழில்தான் நம்மவர்கள் செய்து கொண்டிருந்தார்களா என்று என்னையே நான் கேட்டுக் கொண்டேன்.

தொழில் முறையாக ஜாதிகள் வகுக்கப் பட்டதாகச் சொல்லுவதுண்டு. அது எப்படி இருந்தாலும், வேறொரு உண்மை என் கண்ணில் பட்டது. இந்தியர்கள் அனைவரும் தங்கள் தங்கள் குடும்பங்களைக் கவனித்துக் கொண்டு, சுகவாசி வாழ்க்கை வாழ்ந்து, தங்கள் பொது வாழ்க்கையை இங்கிலீஷ்காரர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள் என்ற உண்மை வெட்ட வெளியாயிற்று.

இந்தியாவில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காரியத்தை மட்டும் கவனித்துக் கொண்டு

போனால், பொதுக் காரியத்தைப் பார்க்கச் சிலர் வேண்டாமா? அந்த வேலையைத்தான் இங்கிலீஷ்காரர்கள், இந்த நாட்டில் சென்ற நூற்றைம்பது வருஷங்களாகச் செய்து கொண்டிருக்கிறார்கள் போலும்! சுகவாசி மனப்பான்மைக்கும் கண்ணன் கீதையிலே உபதேசம் செய்திருக்கும் தன்னலமற்ற கர்மயோக வாழ்க்கைக்கும் சம்பந்தம் உண்டா என்று நீங்களே யோசித்துப் பாருங்கள்.

இங்கிலீஷ் காரர்கள் நம்மவர்களின் பொதுக் காரியமான அரசியல் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டதைப் போல, தமிழ்ப் பண்டிதர்கள் என்ற ஒரு கூட்டத்தார், தமிழ் மொழி சம்பந்தமான சகல பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டார்கள். தீண்டாதார்கள் கோயில்களுக்குள் நுழையக்கூடாது என்று கட்டுப்பாடு செய்யப்பட்டதைப் போல, சாமான்யத் தமிழர்கள் தமிழ் இலக்கிய கோட்டைக்குள் பிரவேசிக்கப்படாது என்பது போல, பண்டிதர்கள் ஏற்பாடு செய்து விட்டார்கள்.

தமிழ் இலக்கியம் மணம் கமழும் தோட்டமாக இருக்க வேண்டியது போக, பண்டிதர்களின் நிர்வாகத் திறனால், அது கோட்டையாகி விட்டது. தோட்டத்தை எல்லாரும் அனுபவிக்கலாம்; ஆனால் கோட்டையைப் பார்த்தால் யாருக்குத்தான் பயமாயிருக்காது? பண்டிதர்களின் தமிழைக் கண்டு, சாமான்ய தமிழர்கள் பயந்து போய், தமிழ் மொழியே தங்களுக்குச் சொந்தமல்லவோ என்று சந்தேகப்படும் நிலைமைக்கு வந்து விட்டார்கள்.

காலத்துக் கேற்றவாறு மொழி மாறும் என்பதை உணராத பண்டிதர்கள், தமிழ் மொழியைப் பெரும்பான்மையோருக்குப் பயன்படாதபடிக்கு செய்து விட்டார்கள். தமிழில் பேச்சுக்கு மட்டுமல்ல, எழுத்துக்கும் வசன நடை வேண்டுமென்பதை அவர்களும், அவர்களுக்கு முன் சென்றவர்களும் உணராதது தமிழர்களின் துர்ப்பாக்கியமாகும். இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காகவோ என்னமோ, வேதநாயகம் பிள்ளை, பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதி, தமிழுக்கு அருமையான தொண்டு செய்து விட்டார்.

'இந்தப் பத்திரிகை நான் வாங்கினது' என்பது தமிழ் என்று தான் நீங்கள் சொல்லுவீர்கள். ஆனால், இது தமிழல்ல என்று வள்ளுவர் காலத்துப் பண்டிதர்கள் சொல்லுவார்கள் என அறிஞர் வையாபுரி பிள்ளை வெகு அழகாக, "ஆனந்த விகடன்" தீபாவளி மலரில் எடுத்துக் காண்பித்திருக்கிறார். பண்டிதர்களை மீறியே தமிழ் மொழி வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை வையாபுரி பிள்ளை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

வேதநாயகம் பிள்ளை வழி காட்டி யிராவிட்டால், தமிழில் இன்றைக்கு வசன நடை வந்திருக்குமோ என்பது சந்தேகம். வேதநாயகம் பிள்ளை பண்டிதர் குழாத்தைச் சேர்ந்தவரல்ல. தமிழ் மொழிக்கு தாங்கள்தான் 'கார்டியன்'கள் என்றும் போஷகர்கள் என்றும் எண்ணி வந்த தமிழ்ப் பண்டிதர்கள் செய்ய வேண்டிய — ஆனால் செய்யத் தவறிய — வேலையை வேதநாயகம் பிள்ளை ஐம்பது வருஷங்களுக்கு முன் செய்ததைத் தமிழ் நாடு மறக்கவே முடியாது.

பரத நாட்டியம் அருமையான கலை என்று இன்று எல்லோராலும் கொண்டாடப்பட்டு வருகிறது. குடித்தனப் பெண்களும் இன்றைக்கு நர்த்தனம் பயின்று வருகிறார்கள். ஆனால், அக்காலத்தில் பரத நாட்டியத்தைக் காப்பாற்றியவர்கள் 'தாசிகள்'.

இப்பேர்ப்பட்ட அருமையான கலை எங்கே போய் ஒதுங்கிக் கிடந்தது என்பதை கவனித்தால், அது விசித்திரமாக இருக்கிறது. தேவதாசிகள் கூட்டம் மட்டும் அதை பயின்று வந்ததன் காரணம் நன்கு புலனாகவில்லை. இன்றைக்குப் பொது மக்களால் போற்றப்படும் பல விஷயங்களை, அக்காலத்தில் ஜனங்கள் பொருள் படுத்தவில்லை.

அந்தக் காலத்தில் இருந்த ஜனங்களின் தன்மைகளைச் சுருக்கமாக சொல்லி விடுகிறேன். அவர்கள் சத்தியத்துக்கு மிகுதியும் கட்டுப் பட்டவர்கள். 'எரிகிற குடத்தை ஒருவர் அணைத்து விட்டால் அவர் சொல்லுவதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன்' என்று சொல்லும் மக்கள் எவ்வளவு சாதுக்களாக இருக்கவேண்டும்! ஏமாற்று வித்தை அவர்களிடம் இல்லை என்றே சொல்லிவிடலாம்.

ஏழை வீட்டுக் கலியாணங்களில் அப்பொழுது ஒன்று நடக்கும். ஏழைகள் வீட்டில் நகைகள் அதிகமாக இருக்கமாட்டா அல்லவா? மணப் பெண்ணை ஜோடித்து அழகு பார்க்கவேண்டும் என்பது இயற்கையான ஆசைதானே? சில பணக்கார வீடுகளில், 'செட்' நகைகள் தயாரித்து வைத்திருப்பார்கள். இவைகளை, பணக்காரர்கள், மனதில் எவ்வித சந்தேகமும் கொள்ளாமல், ஏழை வீட்டுக் கலியாணங்களுக்குக் கொடுத்துஉதவி செய்வார்கள். நகைகள் பதினாயிர ரூபாய்க்கு குறையாது. கைக்குறிப்புக்கூட இல்லாமல், நகைகள் கொடுக்கப்படும். எப்பேர்ப்பட்ட அருமையான நம்பிக்கை!

பய பக்தியோடு இருக்கவேண்டும் என்பது அக்காலத்து மக்களின் உபதேசம். எனவே, பிராமணர் முதல் ஹரிஜனர் வரையில், எல்லோரும் பயந்த சுபாவமுள்ளவர்கள். சட்டம் என்று யார் எதைப் பார்த்து சொன்னாலும் போதும், அதை உடனே, எல்லாரும் ஏக மனதாய் வரவேற்று மரியாதை செய்வார்கள். எனவே, சட்டத்தை அமுல் நடத்தும் உத்தியோகஸ்தர்களிடம், அவர்களுக்கு தேவதா விசுவாசம்.

பணத்தில் அவர்களுக்கு மோகம் வெள்ளைக்கார நாகரிகத்தினால் மிக விரைவில் ஏற்பட்டு விட்டது. ஏழ்மையை ஆபரணமாகக் கொள்ளவேண்டும் என்று இருந்த பண்டை நாகரிகப் படிக்கட்டைத் தாண்ட மனமில்லாமலும் காலத்தின் கொடுமையை உணர்ந்தும் அதை சமாளிக்க வழி



வக்கீல்:— "ஏய் சாட்சி! வாதி, பிரதிவாதி ரெண்டு பேருக்கும், நடந்த சண்டையிலே யாருக்கு அடி ஜாஸ்தி விழுந்தது? உண்மையைச் சொல்லு!"
சாட்சி:— "உண்மையைச் சொல்லப் போனா, அவங்க சண்டையை விலக்கப் போன எனக்குத்தானுங்க அடி பலமா விழுந்தது!"

தெரியாமலும் அவர்கள் திகைத்துத் தவித்தார்கள்.

தொழில்கள் எல்லாம் நசித்துப் போகவே, ஜீவனோபாயத்துக்கு வேறு வழி யில்லாமல், அவர்கள் சர்க்காரில் உத்தியோகத்தை நாட வேண்டி யிருந்தது. உத்தியோகத்துக்குச் செலாவணியான பாஷை இங்கிலீஷ் தான். எனவே, அவர் இங்கிலீஷ் பாஷையை, நிர்ப்பந்தத்தால் கற்க வேண்டி வந்தது. இங்கிலீஷ் பாஷையின் உயர்வைக் கண்டு மோகம் கொண்டு, அவர்கள் அதைக் கற்கவில்லை என்பதை எல்லோரும் தாராளமாக ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பழக்கம் கொடுமை கொண்டது ஆதலால், பின்னர் அவர்களுக்கு அந்த பாஷையில் மோகம் ஏற்பட்டு விட்டது.

ஆளுவது என்பது நம்முடைய வேலையல்ல வென்றும், அதற்கும் நாம் லாயக்கு இல்லை என்றும் அவர்கள் எப்படியோ தங்கள் உள்ளத்தில் புகுத்திக் கொண்டார்கள். ஆளுபவர்களுக்குக் கீழ் உத்தியோகம் தான் பார்க்கலாம் என்ற எண்ணம் தான், அவர்களைப் பிடிவாதமாக கவ்விக் கொண்டிருந்தது.

நாட்டின் பொதுச் செல்வங்களாகிய பாஷை, கலை முதலியவைகளை அழியாமல் காப்பாற்ற முயற்சி செய்தார்கள் அல்லாமல், அவைகளை அபிவிருத்தி செய்ய, அவர்களிடம் ஊக்கமும் உற்சாகமும் இருக்கவில்லை. விரைவில் அழிவை அடையும் வாழ்க்கையைப் பற்றி என்ன கவலை வேண்டியிருக்கிறது என்ற எண்ணத்தாலோ என்னமோ, இவைகளை விருத்தி செய்ய அவர்களுக்கு உற்சாகம் ஏற்படவில்லை.

'நாம் உண்டு; நம்ம குடும்பம் உண்டு; பிறத்தியான் ஜோலிக்கு ஏன் போகவேண்டும்' என்று தங்கள் முழு கவனத்தையும் குடும்ப விஷயங்களிலேயே செலுத்தி விட்டார்கள். குடும்பத்துக்கு அப்பால் நாடு இருக்கிறது என்ற நினைவே அவர்களுக்கு ஏற்படவில்லை. 'தடி எடுத்தவன் தண்டல்காரன்' என்ற பழமொழியை வாழ்க்கையில் ஏற்று, 'ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன? நம் காரியத்தை நாம் பார்த்துக் கொண்டிருப்போம்' என்று தான் அவர்கள் வாழ்ந்தார்கள்.

புதிய நாகரிகத்தில் அவர்களுக்கு ஆசை; பழைய நாகரிகத்தை விட்டால் என்ன ஆகுமோ என்ற பயம் அவர்களுக்கு. மொத்தத்தில், கிராம நாகரிகம் என்ற எல்லைக்குள் கட்டப்பட்ட வாழ்க்கைத் திட்டத்துக்கு உள்பட்டு, அவர்கள் சாதுக்களாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் சாதுக்கள் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், சாதுக்களை உலகம் அப்பாவிகள் என மதிக்கும் என்ற எண்ணம் அவர்களுக்கு தோன்றியதே இல்லை.

(முற்றிற்று)


# நாரதர் ஆண்டு மலர்

கண் கவர் கலர்ப் படங்கள், ரஸமான கதைகள்,
கட்டுரைகள், நூதன சினிமா விஷயங்கள்
நிறைந்தது

1944 ஜனவரி முதல் தேதி வெளிவருகிறது

விலை ரூ. 2/- தபால் சார்ஜ் அணா 8.


## 'கலெக்டர்' விஜயம்






3—2612

# கொள்ளைலாபம் அடிப்பவர்களைத் தடுப்பதற்கு நல்லவழி

அவசியமல்லாத சாமான்களை யுத்த காலத்தில் வாங்குவது புத்தியீனமான காரியம். கொள்ளைலாபம் அடிப்பவர்களுக்குத்தான் இது அநுகூலம். ஆகையால் நீங்கள் அதிகப்படியான விலையில் வாங்கும் ஒவ்வொரு தடவையும் நஷ்டம் அடைகிறீர்கள். இன்றே பணத்தைச் சேர்த்து வையுங்கள்! முக்கியமான தேவைகளுக்கு மட்டிலும் செலவு செய்யுங்கள். நாம் ஜெயம்பெற்றபின் சாமான்கள் சாதாரண விலைகளுக்கு வரும். அது வரை ஆடம்பரப்பொருள்கள் வாங்குவதை நிறுத்திவையுங்கள்.

**உஷாராயிருங்கள்** சேர்த்து வைத்தபணத்தை மதிப்பு குறையாத இடத்தில் போட்டுவையுங்கள். கூட்டுறவு சங்கம், இன்ஷுரன்ஸ், பாங்கி சேமிப்புநிதி அல்லது போஸ்டாபீஸ் சேமிப்பு நிதி இவைகளில் பணத்தைப் போட்டுவையுங்கள். எல்லா வற்றிலும் மேலானது அரசாங்கத்தின் பத்திரங்களும் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகளும் வாங்குவதுதான்



**பாதுகாப்புடன் சேர்த்துவையுங்கள்** ஜாக்கிரதையாயிருங்கள். நீங்கள் சேர்த்து வைக்கும் பணத்தைக்காப்பாற்றும் விஷயத்தில், தங்கம், வெள்ளி, நகை, நிலம், கட்டிடம், சரக்குகள் முதலிய வற்றில் பணத்தைப்போடுவது புத்திசாலித்தனமல்ல. ஏனென்றால், அவைகளின் தற்காலவிலைகள் ஒருநாள் ஒரேயடியாய் கூட திடீரென இறங்கிவிடும்.

## எதிர்காலத்துக்கு சேர்த்துவையுங்கள்

தேசியப் போர் முனையின் தேசிய வேண்டுகோள்.

CPU-241 TM




# தெய்வ சங்கல்பம்

எஸ். ஆர். வி.

பாவம், ஒரு கணம் கூடக் கண்ணை மூட வில்லை ரகுராமன். நோய் வாய்ப்பட்டு, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த தன் அருமைக் குழந்தையை மடியில் போட்டுக் கொண்டு, "இன்று ராத்திரிப் பொழுது நல்ல பொழுதாகப் போக வேண்டுமே!...... ஜுரம் ரொம்பக் கடுமையாக வல்லவா இருக்கிறது!... நாளைக் காலையில் என் மனைவி அம்புலு ஊரிலிருந்து வருகிற வரையிலாவது இது பிழைத்திருக்குமோ இருக்காதோ, தெரியவில்லையே, ஈஸ்வரா......!" என்று கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருந்தான். பக்கத்திலிருந்த அவனுடைய தாயார் காமாட்சி அம்மாள், "எனக்கு மட்டும் முன்னேயே தெரியும்டா அப்பா, ரகுராமா! தாயாரைப் பிரிஞ்ச குழந்தை எத்தனை நாளைக்குத்தான் பிழைச்சிருக்கும்? நான் அப்பவே சொன்னேனே, கேட்டயா? ஒரே பிடிவாதம் பிடிச்சே!... நாளைக்குக் காலம்பர இதனுடைய தாயார் வர வரைக்குமாவது இதை உயிரோடே வச்சிருந்தாத் தேவலை!" என்று சொன்னது அவன் இதயத்தில் ஈட்டிகளைப் போலப் பாய்ந்தன. அவன் மனக் கண்முன் பழைய சம்பவங்கள் எல்லாம் ஒவ்வொன்றாகத் தோன்றித் தோன்றி மறைந்தன.

அவனுக்குக் கல்யாணம் ஆன நான்காம் நாளே அவன் மாமனார் நாராயணய்யர் அவனைத் தனியாக அழைத்து, "நீ உன் வேலையை விட்டு விட்டுத் தஞ்சாவூருக்கு வந்து விடு. அங்கே என் வீட்டில் சௌக்கியமாக இருக்கலாம்" என்று சொன்னார். அவர் ஒரு ரிடயர்ட் டிப்டி கலெக்டர். தாம் பணக்காரர் என்ற மமதையில் தான் அவர் அவ்வாறு சொன்னார். ஆனால் ரகுராமனுக்கு அந்த யோசனை சிறிதும் பிடிக்கவில்லை. பட்டணத்தில் அவன் பார்த்து வந்த உத்தியோகத்தில் முப்பது ரூபாய் தான் சம்பளம் கிடைத்ததென்றாலும், அதை விட்டு விட்டு மாமனார் வீடே கதி என்று அங்கு போய்த் தங்கியிருக்க அவன் விரும்பவில்லை. தவிரவும், தாயார் தகப்பனாரைப் போஷிக்க வேண்டிய பொறுப்பு அவனுக்கு இருக்கும் போது, அவனால் எவ்விதம் மாமனாரின் மேற்கூறிய யோசனைக்குச் சம்மதிக்க முடியும்? ஆகவே, அவன் மறுத்து விட்டான்.

இதனால் பெரிதும் ஏமாற்றமடைந்த அவன் மாமனாருக்கு அவன்மீது கோபம் ஏற்பட்டதில் வியப்பு ஒன்றுமில்லை. அந்தக் கோபத்தில் அவர், வெகு நாள் வரையில், தம் பெண்ணைப் பட்டணத்திற்கு அனுப்பாமலே கூட வைத்திருந்தார். ஆனால், அவருடைய பெண் அம்புலுவோ புருஷனை நினைத்து ஏங்கி மெலிந்து கொண்டிருக்கிறாள் என்று அவருக்குத் தெரிந்ததும், "புருஷன் வீட்டுக்குப் போய்க் கஷ்டப்பட்டால் அப்புறம் தன்னாலேயே இங்கு ஓடி வருகிறாள்!" என்று எண்ணிக் கொண்டு அவளைப் பட்டணத்திற்கு அனுப்பினார்.

பட்டணத்திற்கு வந்ததும் அம்புலு, தன் கணவன் மாமியார் மாமனாரின் இஷ்டப்படி நடந்து, அவர்க

ளுடைய அபிமானத்தையும் நன் மதிப்பையும் பெற்று விட்டாள்.

அவள் பட்டணத்திற்கு வந்த பிறகு அவளுடைய தகப்பனுர் அவளைத் தஞ்சாவூருக்கு வந்து போகும்படி எவ்வளவோ லெட்டர்கள் எழுதினுர். ஆனுல் அம்புலுவுக்குத் தன் புருஷனை விட்டு விட்டுப் போக விருப்பமில்லை. ரகுராமன் தனக்கு மாமனுர் என்று ஒருவர் இருப்பதையே கூட மறந்து விட்டான். இப்படியே ஏழு வருஷங்கள் சென்று விட்டன. அம்புலுவுக்கும் பாலு, சாவித்திரி, மணி, என்று மூன்று குழந்தைகள் பிறந்திருந்தன.

கடைசிக் குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டதும்தான் அம்புலுவின் தகப்பனுர் நாராயணய்யர் தம் பெண்ணுக்குப் பின்வருமாறு கடுமையாக ஒரு கடிதம் எழுதினுர்: "இந்த லெட்டர் கண்டதும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டு வரவும். இங்கு வந்து நீ சௌக்கியமாக இருக்க வேண்டும் என்று எண்ணித் தான் இந்த லெட்டரை எழுதுகிறேன். ரயில் சார்ஜுக்காக ரூபாய் இருபது அனுப்பியிருக்கிறேன். பெற்றுக் கொள்ளவும்."

அன்று தபாலிலேயே அம்புலு வழக்கம் போலவே, 'இப்போது அங்கு வர சௌகரியமில்லை" என்று தன் தகப்பனுருக்கு ஒரு லெட்டர் எழுதிப் போட்டுவிட்டாள்.

பெண்ணின் கடிதத்தைப் பார்த்த நாராயணய்யருக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. "ரகுராமன் அதிகாரம் பெரிய அதிகாரமாயிருக்கும் போலிருக்கிறதே! அம்புலுவுக்கு இங்கே வர இஷ்டமில்லாமலா இருக்கும்? புருஷனுக்குப் பயந்து கொண்டுதான் அவள் இவ்விதம் எழுதியிருக்கிருள். பாவம், மூன்று குழந்தைகளையும் வைத்துக்கொண்டு அந்த முப்பது ரூபாய் சம்பளத்தில் எப்படித்தான் குடித்தனம் செய்கிருளோ? போதாக்குறைக்கு இரண்டு கிழங்கள் வேறே இருக்கு!...நாளைக்கே போய் அவளை அழைத்துக் கொண்டு வந்து விட்டுத்தான் மறு காரியம் பார்க்க வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டவராய்ப் பட்டணத்திற்குப் புறப்பட்டுவந்தார்.

ரகுராமனுடைய வீட்டுக்கு வந்தவர், உள்ளே நுழையாமல், வாசலில் இருந்தபடியே "அம்புலு!" என்று கூப்பிட்டார். அம்புலு அப்போது தன் கடைசிக் குழந்தை மணிக்குப் பால் போட்டிக் கொண்டிருந்தாள். தகப்பனுரின் குரல் கேட்டதும் குழந்தையும் கையுமாக அப்படியே வாசலுக்கு ஓடினுள். அங்கே ரௌத்திரகாரமாக நின்று கொண்டிருந்த நாராயணய்யர், "அம்புலு! அதோ, 'கார்' நிற்கிறது பாரு, ஏறிக்



கொள் அதிலே! உம்! சீக்கிரம்" என்று மிரட்டினர்.



அம்புலுவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பாவம், அவள் தகப்பனுரின் கோபத்திற்குப் பயப்படுவாளா, புருஷனின் கோபத்திற்குப் பயப்படுவாளா? அந்த தர்ம சங்கடமான நிலைமையிலிருந்து தப்பித்துக் கொள்ள வழியொன்றும் தோன்ருமல், மனம் குழப்பமடைந்தவளாய், சிறிது நேரம் அப்படியே திகைத்து நின்ருள். பிறகு ஒருவித தீர்மானத்திற்கு வந்தவளாய், "அவரைக் கேட்காமேயா?" என்று தைரியமாகக் கேட்டுவிட்டு, மெள்ள உள்ளே செல்லத் திரும்பினுள். ஆனுல் அதற்குள் நாராயணய்யர் அவள் கையை முரட்டுத்தனமாகப் பிடித்துத் தரதர வென்று இழுத்துக் கொண்டு போய் வாசலில் தயாராக நின்று கொண்டிருந்த மோட்டாருக்குள் தள்ளிவிட்டுத் தாமும் அதில் ஏறிக் கொண்டார்.

அப்பொழுதுதான் 'மார்க்கட்'டிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த ரகுராமன் தன் வீட்டு வாசலில் மோட்டார் நின்று கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு விரைந்து ஓடி வந்தான். அந்த மோட்டாருக்குள் நாராயணய்யரும் அம்புலுவும் இருந்ததைப் பார்த்ததும் அவனுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. "அம்புலு! இவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா நீ! பேஷ்!...... நான் இல்லாத சமயத்திலே, இப்படித் திருட்டுத்தனமா உங்கப்பா பின்னேடே கிளம்பறத்துக்கு உனக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கவேண்டாம்! ...எனக்குத் தெரியாமே உங்கப்பாவுக்கு லெட்டர் போட்டு வரவழைச்சயாக்கம்? சரிதான், உங்கப்பா வீட்டிலேயே இருந்துடு இனிமே! இங்கே வரவே வேண்டாம்!" என்று பற்களைக் கடித்துக் கொண்டு கோபாவேசத்துடன் பேசினுன். அதைக் கேட்டதும் நாராயணய்யர், "வாயை அடக்கிப் பேசுடா! பிரமாதமா மிரட்டறயே அம்புலுவை! என் வீட்டிலேயே அவள் இருக்க முடியாதா என்ன! நான் சாப்பாடு போட மாட்டேனு? உன்னைப்போல தரித்திரனு? இவள் மேலே இருந்த நகையை எல்லாம்



....குழந்தைகளும் கண்ணீர் விட்டு ..

கூட வித்துச் சாப்பிட்டிருக்கியே!” என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

இந்த வார்த்தைகள் ரகுராமனுக்குச் சுருக்கென்று தைத்தன. உண்மையில், குடும்பக் கஷ்டத்தைச் சமாளிக்கும் பொருட்டு அம்புலுவின் நகைகள் சிலவற்றை அவன் விற்று விட்டிருந்தான். எனவே, மாமனார் கூறிய வார்த்தைகள் அவனுடைய ஆத்திரத்தை மேலும் கிளப்பி விட்டன. அவனுடைய கோபமெல்லாம் முக்கியமாக அம்புலுவின் மீதுதான் சென்றது. “அம்புலு!...உங்கப்பாகிட்டே எல்லாத்தையும் சொன்னையாக்கம்! ......உனக்கு நகைதானே பெரிசாப் போயிடுத்து?” என்று கேட்டுவிட்டு ஒரு பெருமூச்சு விட்டான். அதே சமயம் அவனுக்கு அம்புலுவின் கையிலிருந்த குழந்தையின் மீது கவனம் செல்லவே அவளிடமிருந்த அக் குழந்தையை சடக்கென்று பிடுங்கிக்கொண்டு, “என் குழந்தையை எங்கே எடுத்துண்டு போறே? நீ வேணும்னா தொலைஞ்சு போ!” என்று குழந்தையுடன் வீட்டுக்குள் விடு விடென்று போய் விட்டான். அதைக் கண்ட அம்புலு, “ஐயையோ! அப்பா, அப்பா, நான் உன்னோடே வரல்லே அப்பா!...” என்று கதறிக்கொண்டு மோட்டாரை விட்டு இறங்கப் போனாள். ஆனால் அதற்குள் நாராயணய்யர், “காரை விடு!” என்று டிரைவருக்கு உத்தரவு கொடுத்துவிடவே, மோட்டார் அங்கிருந்து காற்றாய்ப் பறந்து விட்டது.

ஆனால், கார் போன சில நிமிஷங்களுக்கெல்லாம் ரகுராமனுக்குத் தான் செய்த காரியம் ரொம்பவும் பிசகு என்று தெரிந்து விட்டது. தான் அம்புலுவைப் பற்றி எண்ணியதெல்லாம் தவறு என்பதையும் உணர்ந்து விட்டான். அவனுடைய தாயார் காமாட்சி அம்மாள், “அம்புலு ஒரு பாவமும் அறியாதவள்டா! யாரோ கூப்பிட்டாளேன்னு வாசல்லே போனாள். உடனே அந்தப் பிராமணன் அவளைத் தரதரான்னு இழுத்துண்டு போய்க் காருக்குள்ளே தள்ளிட்டான்!...அவள் என்னடா செய்வாள்?...உண்மை தெரியாமே இப்படி இந்தக் குழந்தையைப் பிடுங்கிண்டு வந்துட்டயே!..... அவள் மனசு எவ்வளவு கஷ்டப்படும்!... தாயாரையும் குழந்தையையும் பிரிக்கிறது மகா பாவமில்லையா?” என்று கெஞ்சியபோது அவனுடைய உள்ளம் துடித்தது.

* * *

அதற்குப் பிறகு ரகுராமன் அம்புலுவுக்கு எவ்வளவோ கடிதங்கள் எழுதினான். ஆனால் அந்த லெட்டர்களையெல்லாம் அம்புலுவின் கண்ணில் காட்டாமல் நாராயணய்யர் அப்படியே திருப்பி அனுப்பி விட்டார்.

இதற்குப் பிறகு ஒரு வருஷம் சென்றது. ஒரு நாள் குழந்தை மணிக்குத் திடீரென்று ஜுரம் கண்டு சற்றும் எதிர்பாராத விதமாக அது ரொம்பவும் கடுமையாகிக் கொண்டு வரவே, குழந்தையைப் பரீட்சித்த டாக்டர், “தாயாரைச் சட்டென்று தருவியுங்கள் சார்! இல்லாவிட்டால் குழந்தை பிழைப்பது கஷ்டம்” என்று எச்சரித்து விட்டார்.

மீண்டும் அம்புலுவுக்குக் கடிதம் போடுவதில் உபயோகம் இல்லை என்று ரகுராமன் தவித்தசமயத்தில், அவனுடைய தாயார் காமாட்சி அம்மாளுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. “பக்கத்தாத்துப் பார்வதி இன்னி ராத்திரி வண்டியிலே தஞ்சாவூருக்குப் போறாளாம். அவளிடத்திலே சொல்லி அனுப்பினா, அவள் அம்புலுவை நேரிலே பார்த்து விஷயத்தைத் தெரிவிப்பாள்” என்று சொன்னாள். அதுவே சிறந்த



யோசனை என்று ரகுராமனுக்கும் தோன்றவே, உடனே அம்புலுவுக்கு ஒரு கடிதம் எழுதி அதைப் பார்வதி அம்மாளிடம் கொடுத்தான்.

அதற்கு இரண்டு நாள் கழித்து அம்புலுவிடமிருந்து ரகுராமனுக்குப் பின்வருமாறு கடிதம் வந்தது: “நீங்கள் என்னை வெறுத்து விட்டீர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த எனக்கு இப்போது உங்கள் லெட்டரைப் பார்த்ததும் ஏற்பட்டிருக்கும் சந்தோஷம் எல்லையற்றிருக்கிறது...இனி இங்கே அரை நிமிஷங் கூட இருக்க மாட்டேன். என் கண்மணி ஜுரமாய்க் கிடப்பது இத்தனை நாளாகத் தெரியாமல் போய் விட்டதே!.....என் அப்பாவை நான் உத்தரவு கேட்காமலேயே புறப்பட்டுவரத் தீர்மானித்து விட்டேன். யாரையாவது டிக்கட் வாங்கிக் கொடுக்கச் சொல்லி நாளை ரயிலில் ஏறி விடுகிறேன். ரயிலில் ஏறியதும் ஒரு தந்தி கூடக் கொடுக்கச் சொல்லுகிறேன். நீங்கள் எழும்பூர் ஸ்டேஷனுக்கு வந்து என்னை அழைத்துக் கொண்டு போங்கள்.”

இந்த லெட்டரில் கண்டிருந்தபடியே அம்புலு மறுநாள் இரவு வண்டியில் பட்டணத்திற்குப் புறப்பட்டு விட்டாள். புறப்படும்போதே “எழும்பூருக்கு நாளைக் காலையில் வாருங்கள்” என்று ரகுராமனுக்கு ஒரு தந்தியும் கொடுத்து விட்டாள். இவ்விதம் அம்புலுவிடமிருந்து தந்தி கிடைத்திருந்ததனால்தான், “பொழுது விடியுமட்டும் குழந்தை பிழைத்திருக்க வேண்டுமே!” என்று ஆரம்பத்தில் கூறியவாறு அவன் கடவுளை வேண்டிக் கொண்டிருந்தான்.

மணி ஐந்து அடித்தது. காமாட்சி அம்மாள், “ரகுராமா, நாழியாச்சு! கிளம்பு! குழந்தையை நான் பார்த்திண்டிருக்கேன். நீ ஒரு ஜட்கா வண்டியை வச்சிண்டு எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போய் அம்புலுவை அழைச்சிண்டு வா, போ!...” என்று அவசரப் படுத்தினாள்.

அந்த வார்த்தையை கேட்டதும், அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த பாலுவும் சரஸ்வதியும் சட்டென்று விழித்துக்கொண்டு “அப்பா, அப்பா! நானும் வரேன், அப்பா!...அம்மாவை நானும் பார்க்கணும், அப்பா!”என்று ரகுராமனுடன் கிளம்பத் தயாராக நின்றார்கள்.

ரகுராமனுக்குக் கண்ணில் நீர் துளித்தது. “பாவம், நம்மைப் போலத்தானே இருக்கும் குழந்தைகளுக்கும்! தாயாரைப் பிரிந்து இத்தனை நாள் இருந்த குழந்தைகளுக்குத் தாயாரைப் பார்க்க வேண்டுமென்று ஆசை இருக்காதா?” என்று எண்ணியவாறு அவர்களையும் கூடவே அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

போட் மெயில் வரும் நேரத்திற்கு அரை மணிக்கு முன்னேயே ரகுராமனும் குழந்தைகளும் எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போய் விட்டார்கள்.

பிளாட் பாரத்துக்குள் சென்றது முதல் பாலுவும் சரஸ்வதியும் கேள்விகளுக்கு மேல் கேள்விகள் கேட்டு ரகுராமனைத் துளைத்துக் கொண்டிருந்தார்கள். “அம்மா பொம்மை வாங்கிண்டு வருவாளோல்லியோ, அப்பா?” என்றாள் சரஸ்வதி.

“உனக்கு எதுக்கு பொம்மை? உங்கிட்டேதான் இருக்கே!- அம்மா வந்து...எனக்குத்தானே பொம்மை வாங்கிண்டு வருவா, அப்பா?” என்றான் பாலு. இது மாதிரி நூற்றுக் கணக்கான கேள்விகள்.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் வெகு பொறுமையோடு ரகுராமன் பதில் சொல்லிக் கொண்டிருக்கையில் தான், ஸ்டேஷனில் ஜனங்கள்

கூடிக் கூடிப் பேச ஆரம்பித்தார்கள். ரகுராமனும் அவர்கள் பேச்சை கவனித்தான். "போட் மெயில் கவிழ்ந்து விட்டதாம்!" என்ற செய்தி அவன் காதில் விழுந்தது. அதைக் கேட்டதும் ரகுராமனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "ஐயையோ!" என்று அலறிக்கொண்டு ஸ்டேஷன் மாஸ்டரின் அறையை நோக்கி ஓடி, "நிஜமாகவா, ஸார்? எந்த இடத்திலே ஸார் கவிழ்ந்ததாம்?...எல்லாரும் செத்துப் போயிருப்பாளா, ஸார்?" என்று பர பரப்போடும் பீதியோடும் விசாரித்தான்.

அவனைப் போலவே அந்த அறைக்குள் கூடி யிருந்த ஜனங்களும் ஸ்டேஷன் மாஸ்டரை ஆவலுடன் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஸ்டேஷன் மாஸ்டருக்கு அப்போது எவ்வித விவரமும் தெரிந்திருக்க வில்லையாதலால், "சற்றுப் பொறுமையா யிருங்கள்! எங்கு விபத்து ஏற்பட்டதென்று இன்னும் தெரிய வில்லை. இறந்தவர்களின் விவரமும் தெரிய வில்லை" என்று தான் அவரால் பதில் சொல்ல முடிந்தது.

ரகுராமனுக்குத் தலை சுழன்றது. அப்படியே ஒரு பெஞ்சியில் சாய்ந்து விட்டான். "அப்பா, அப்பா, அம்மா என் அப்பா வரல்லே?" என்று அவனுடைய குழந்தைகள் கேட்ட கேள்விகள் அவன் காதில்விழவில்லை.

ஒன்பது மணி சுமாருக்குத்தான் ஸ்டேஷன் மாஸ்டரால் சிறிது விவரம் கொடுக்க முடிந்தது. போட் மெயில் கவிழ்ந்த இடம் விழுப்புரத்திற்குச் சமீபம் என்றும், விபத்துக்குட்பட்டவர்களைத் தாங்கிய பிரத்தியேக வண்டியொன்று சென்னைக்கு அன்று மத்தியானம் மூன்று மணிக்கு வந்து சேரும் என்றும் தெரிவித்தார்.

அங்கு காத்திருப்பதில் உபயோகம் இல்லையென்று கண்டு, குழந்தைகளை அழைத்துக்கொண்டு ரகுராமன் வீட்டுக்குப் போனான். போனதும் ஒன்றும் விவரமாகச் சொல்லத் தோன்றாமல் தேம்பித் தேம்பி அழுதான். "அம்மா செத்துப் போயிட்டாளாம், பாட்டி" என்று குழந்தைகளும் கண்ணீர் விட்டுப் பரிதாபமான குரலில் அழுதன. விவரம் என்னவென்று தெரிந்ததும் காமாட்சி அம்மாளும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, "ஐயோ!......தங்கமான பொண்ணைப் பறி கொடுத்துட்டோமே...என்னடா பண்ணுவேன்! ...குழந்தையும் செத்துப் போயிடும் போலே இருக்கேடா!...எனக்குச் சாவு வரல்லியே!...சின்னஞ் சிறுசுக்குத்தானா வரணும்?......ஆசையோடே ஆம்படையானையும் குழந்தைகளையும் பார்க்கணும்னு புறப்பட்டு வந்தாளே, அவளுக்கு இந்த கதியா ஏற்படணும்?" என்று புலம்பி அழுதாள்.

இதற்குள் பக்கத்து வீட்டுக்காரர்களெல்லாம் வந்து கூடிவிட்டார்கள். அவர்களில் சிலர், "என் மாமி அழறேள்? மத்தியானம் தான் ஒரு வண்டி வரப் போறதாமே! அதிலே உங்க நாட்டுப் பொண் வந்தாலும் வரலாமோல்லியோ? 'அவ செத்துப் போய்ட்டாள்'னு ஏன் நினைக்கிறேள்? தைரியமா இருங்கோ. உங்க நல்ல மனசுக்கு, அப்படி ஒண்ணும் ஆபத்து நேரிடாது, பகவான் இருக்கார்!" என்று தைரியம் சொன்னார்கள்.

ஆனால், பகவானின் மனதில் என்ன இருந்தது என்பதை அவர்கள் கண்டார்களா? ஒரு குடும்பத்திற்குக் கஷ்டத்தின் மேல் கஷ்டத்தைக் கொடுக்க வேண்டுமென்பது தெய்வ சங்கல்பமா யிருந்தால் அதை யார் தான் தடுத்து விட முடியும்?

அன்று மத்தியானம் வந்த பிரத்தியேக வண்டியிலும் அம்புலுவைக் காணவில்லை! விபத்திலிருந்து தப்பிய அனைவரும் வந்து விட்டார்கள் என்றும் ஸ்டேஷன் மாஸ்டர் தெரிவித்து விட்டார். அதற்குமேலும் நம்பிக்கை வைப்பதற்கு என்ன இருந்தது?

என்றாலும், சில நண்பர்கள் விபத்து ஏற்பட்ட ஸ்தலத்திற்கும் போய்ப் பார்த்து விடுவது நல்லது என்று கூறவே, ரகுராமன் உடனே புறப்பட்டுச் சென்றான். ஆனால், அங்கேயும் அம்புலுவைக் காணவில்லை. அங்கிருந்த ரயில்வே உத்தியோகஸ்தர்கள் கூறியதிலிருந்து இறந்து போன சிலர் புதை பட்டுப் போய்விட்டார்கள் என்றும், அவர்களைத் தோண்டி எடுத்தபிறகு பந்துக்களுக்குச் செய்தி அறிவிக்கப்படும் என்றும் தெரிய வந்தது.

"பிணத்தைக் கூடப் பார்க்க நமக்கு அதிர்ஷ்டமில்லையே!...இது எனக்கு நல்ல தண்டனை தான்!... இனிமேல், குழந்தைகளை என் தாயாரிடம் ஒப்புவித்து விட்டு நானும் பிராணனை விட்டு விடவேண்டியது தான்!" என்று தீர்மானித்துக் கொண்டு சென்னைக்குத் திரும்பினான் ரகுராமன்.

அம்புலு இறந்துதான் போயிருக்க வேண்டும் என்ற துக்கச் செய்தியைக் கேட்டுக் காமாட்சி அம்மாளும் குழந்தைகளும் என்ன பாடு பட்டார்கள் என்பதெல்லாம் சொல்லத் தரமல்ல. திரும்பி வந்த ரகுராமன் நோய் வாய்ப் பட்டுக் கிடந்த குழந்தையை எடுத்து அணைத்துக்கொண்டு, தன் தாயாரைப் பார்த்து, "அம்மா! அவள் போய்விட்டாள்!...இனிமேல் இந்த பாரம் எல்லாம் உன் தலையில் தான் விழுந்து விட்டது" என்று துக்கித்தான்.

அப்போது காமாட்சி அம்மாள், "நடந்தது நடந்துடுத்து, இனிமே வருத்தப் பட்டு என்ன பிரயோசனம்? மேற் கொண்டு ஆகிறதை கவனிக்கலாம். உங்கப்பாவுக்குத் தந்தியைக் கொடு!" என்றாள்.

ரகுராமனும் உணர்ச்சியற்று இயந்திரம் போல் தாயார் சொல்லியபடி திருச்சியில் இருந்த தன் தந்தைக்குத் தந்தி கொடுத்து விட்டு வந்தான்.

மறு நாள் காலையில் தகப்பனாரின் வரவுக்காக ரகுராமன் வாசலில் காத்துக் கொண்டிருந்தான். துக்கம் கேட்பதற்காக ஜனங்கள் அந்த வீட்டுக்குள் போவதும் வருவதுமா யிருந்தனர். அந்த சமயத்தில் ஒரு ஜட்கா வண்டி ரகுராமனின் வீட்டை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்ததைக் கவனித்த ஒருவர், "பெரியவர் வந்துட்டார்" என்று தெரிவித்தார். தலையில் கையை வைத்துக் கொண்டு கண்ணில் நீர் வழிய திண்ணையின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த ரகுராமனின் காதில் அந்த வார்த்தைகள் விழவேயில்லை.

ஜட்கா வண்டி அந்த வீட்டு வாசலில் வந்து நின்றதும், "அம்புலு! அம்புலு!!" என்று ஏக காலத்தில் அநேகர் சேர்ந்தாப்போல கூச்சலிடவே, ரகுராமன் திடுக்கிட்டு கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தான்.

என்ன ஆச்சரியம்! இறந்து போய் விட்டதாகக் கருதப்பட்டிருந்த சாக்ஷாத் அம்புலுவே அந்த வண்டியிலிருந்து இறங்கினாள்!

அச் செய்தியைக் கேட்டு விட்டுக் காமாட்சி அம்மாள் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தவளாய் ஒரே தாவில் வாசலுக்கு ஓடி வந்து அம்புலுவை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டு, "அம்புலு, அம்புலு!! பிழைச்சுட்டியாடி!... நீ செத்துப் போய்ட்டேன்னுட்டுன்னா நாங்கள்ளாம் அழுதுண்டிருக்கோம்! ......எப்படியடி பிழைச்சே!" என்று மள மள வென்று ஆயிரம் கேள்விகள் கேட்டு விட்டாள். பாலுவும், சரஸ்வதியும், "அம்மா!" என்று ஓடி வந்து தாயாரைக் கட்டிக் கொண்டார்கள். ரகுராமன் தன் இதயத்

தில் தோன்றிய உணர்ச்சியை யெல்லாம் ஒருவாறு அடக்கிக் கொண்டு "அம்புலு!" என்று கூப்பிட முயன்ருன். அவனுல் பேச முடியவில்லை. துக்கம் நெஞ்சை யடைத்துக் கொண்டது. இதற்குள், அங்கே கூடி யிருந்தவர்கள் அம்புலுவைச் சூழ்ந்து கொண்டார்கள்.

ஆனுல் அம்புலு எவருக்கும் பதில் சொல்லாமல், ஜுரமாய்க் கிடந்த குழந்தையின் பக்கத்தில் சட்டென்று ஓடிச் சென்று அதை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு, "கண்ணைத் திறடா, என் கண்ணே! ......இதோ அம்மா வந்திருக்கேன், பாருடா மணி!" என்று கவலையும், துயரமும் நிறைந்தகுரலில்கத்தினுள்.

அதைக் கண்ட காமாட்சி அம்மாள், "அம்புலு! உன் குழந்தை இனிமே பிழைச்சுடும். பேசாமே இரு!...டாக்டரே முன்னே சொன்ஞர், தாயார் வந்தா குழந்தை நிச்சயமா பிழைச்சுக்கும்னு! ஒண்ணும் கவலைப்படாதே! நீ ஆபத்திலேருந்து தப்பிப் பிழைச்சது தான் எங்களுக்கெல்லாம் ஆச்சரியமா இருக்கு!" என்றதும் அம்புலு, "ஏதோ நல்ல காலம்தான் அம்மா, நான் அந்த ரயிலிலேயே இல்லே!" என்ருள்.

ரகுராமனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. "நிஜமாவா! போட் மெயில்லேதானே நீ புறப்பட்டே?" என்று கேட்டான்.

"அதிலேதான் புறப்பட்டேன். ஆனு சிதம்பரத்திலேயே இறங்கிட்டேன்!"

"சிதம்பரத்திலேயா? அங்கே ஏன் இறங்கினே?"

"தஞ்சாவூரிலே எனக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்தவன் ஒரு போக்கிரி போலே யிருக்கு!...பட்டணத்துக்கு டிக்கட் வாங்காமே, சீயாழி வரையிலே வாங்கிக் கொடுத்துட்டுப் போயிட்டான். எனக்கு அது தெரியவே தெரியாது."

"அப்பறம்?"

"சிதம்பரம் ஸ்டேஷன்லே ஒரு டிக்கட் கலெக்டர் பார்த்து 'சீயாழி வரையிலே டிக்கட்வாங்கிவிட்டு சிதம்பரம் வரையிலே ஏன் வந்தே?'ன்னு என்னை மிரட்டி அந்த ஸ்டேஷனிலேயே இறக்கி விட்டுட்டான்."

"அட பாவமே! உம்,அப்புறம்?"

"கையிலேயோ பணம் இல்லே. என்ன செய்யறது? சிதம்பரத்திலேயே ஒரு நாள் இருந்துட்டு, அங்கே ஒரு தீக்ஷிதர் மாமியைக் கேட்டு ஐந்து ரூபா கடன் வாங்கிண்டு இங்கே வந்து சேர்ந்தேன்: ரொம்பத் தங்கமான மாமி! என் மோதிரத்தைக் கழட்டிக் கொடுத்து அதை அடகா வச்சிண்டு ரூபா கொடுங்கோன்னு கேட்டேன். மாட்டவே மாட்டேன்னு சொல்லிட்டு ஐந்து ரூபாயைக் கட்டாயப் படுத்திக் கொடுத்து அனுப்பினு! அது மாதிரி சிதம்பரத்திலே இறங்கி இருக்காத போனு, நான் செத்துப் போயிருக்கவேண்டியதுதான்!"

அதைக் கேட்டதும் காமாட்சி அம்மாள் மனம் பூரித்தவளாய், "எல்லாம் அந்த பகவானுடைய கிருபை தாண்டி, அம்மா! நான் பண்ணின பூஜையெல்லாம் வீணுகல்லே! அவர்தான் உன்னை எப்படியோ காப்பாத்திட்டார்! நாளைக்கே பிள்ளையாருக்குக் குழக்கட்டை பண்ணிட்டுத்தான் மறுகாரியம் பார்க்கணும்!" என்ருள்.

அப்போது ரகுராமன் "அதோடே மட்டும் திருப்தி அடைஞ்சுடப்படாது அம்மா! நம்ப அம்புலுவுக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்தான் பாரு ஒரு புண்ணியவான், அவனைத் தேடிப் பிடிச்சு அவனுக்கு நல்ல இனும் கொடுத்தாகணும் முன்னுலே!" என்று கூறியபோது அந்தக் குடும்பத்தார் அனைவரும் சகல துக்கங்களையும் மறந்து சிரித்தார்கள்.

வியாதியாய்க் கிடந்த குழந்தை கூடக் கண்ணைத் திறந்து ஒரு சிறிய புன்னகை செய்தது!





இந்தியாவுக் கென்றே
தயாரிக்கப்பட்டவை!

எப்பொழுதும் சரியான மணி காட்டுபவை என்று வெஸட் எண்ட் வாட்சுகள் புகழ்பெற றிருப்பதுபற்றி நாஙகள் பெருமை கொள்கிறோம். சிறந்த சாமான்கள், கை தேர்ந்த வேலைப்பாடு இரண்டும் சேர்ந்து வெஸ்ட் எண்ட் வாட்சுகள் பணத்திற்கேற்ற சரக்காக விளங்குவதுதான் இப்புகழின் காரணம். வெஸ்ட் எண்ட் வாட்சுகள் எல்லாம இந்தியாவின் சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றவாறு தயாரிக்கபபட்டு எல்லா விதத்திலும திருப்தி யளிக்கும்.



நியூ காலிபர் "E"
மிகச் சிறந்த வாட்ச். 15 ஜுவல்கள்
நிக்கல் ஸில்வர் கேஸ் ... ... ரூ. 62.
பேடன்ட் எவர் பிரைட் ஸ்டீல் ரூ. 71.
18 காரட் முழுத் தஙகம் ... ரூ. 197.
ரேடியமமுட்களும்,எண்களும் ரூ.5அதிகம்



கேட்ஜாப் ரெக்டாங்குலர்
டீலக்ஸ் குவாலடி வாட்ச். 16ஜுவல்கள்
18 காரட் முழுத் தஙகம் ... ரூ. 304.

சாமான்கள் சரிவர வராததன் காரணமாக விளம்பரப்படுத்தியிருக்கும் எல்லாவிதமான மாடல்களையும் சப்ளை செய்ய இயலாமல் இருக்கலாம். ஆனால் ஸ்டாக் உள்ளவரை கூடுமானவரை ஆர்டர்களுக்கு சப்ளை செய்வோம்.

வெஸ்ட் எண்டு வாட்சு கோ., பம்பாய்-கல்கத்தா

WEST END WATCH Co
BOMBAY CALCUTTA




# ராஜ வைத்தியர்

எஸ். எஸ்.

மூன்று நாளாகச் சிங்கத்தின் குழந்தை நரஸிம்ஹனுக்கு மப்பு ஜுரம். "ஆமாம்! இத்தனும் பெரிய காட்டுக்கு ராஜான்னு பேர் தான்! குழந்தைக்கு உடம்பைப் பார்க்க ஒரு டாக்டரை வரவழைக்க முடியல்லே! இதைப் பார்த்தால் சிவனேன்னு எங்கேயாவது பட்டணத்தைப் பார்க்கக் கிளம்பி விடலாம்னு தோண்றது" என்று கூச்சல் போட்டது ராணி சிங்கம்.

"தோணும், தோணும். அங்கே போனால் துப்பாக்கியும் கையுமாக உனக்கு வரவேற்பு நடக்கும். போடீ போ! தனக்கு இருக்கிற பெருமை தெரியல்லே. பட்டணத்திலே எடுத்ததற்கெல்லாம், "புலிப் பால் கிடைச்சாலும் கிடைக்கும்" என்று கிடைக்காத அபூர்வ சாமான்களைப் பற்றிக் குறிப்பிடுவா. இங்கே நம் அரண்மனை வாசலிலே தினம் எவ்வளவு புலி கட்டிப் பால் கறந்தாகிறது! இன்னொருத்தியானால் பெருமை தலை கொள்ளாது!" என்றது சிங்கம்.

"இப்போ நான் அதெல்லாம் இல்லேன்னு சொல்லவில்லையே? 'குழந்தைக்கு நல்ல வைத்தியர் ஒருத்தர் அகப்பட மாட்டாரா? கை மருந்தாய் எத்தனை நாள் கொடுக்கிறது?' என்கிறேன்!"

"ஹூம்" என்று கர்ஜித்து, "யாரடா அவன்?" என்று கூவியது சிங்கம். "நம்ம காட்டில் வைத்தியன் யாருமே இல்லையா?" என்றது.

சேவகன் நரி தண்டனிட்டு வந்து நின்று, "நேற்றுதான் ஒரு வைத்தியர் புதிசாய் வைத்திய சாலை ஏற்படுத்தி யிருக்கிறார். எங்கள் இனம்தான். இதோ ஒரு நொடியில் அழைத்து வருகிறேன்" என்று கூறிக் கொண்டு நரி வெளியே ஓடிற்று.



சிங்க ராஜகுமாரனுக்கு நரி வைத்தியன் கொடுத்த மருந்தினால் உடம்பு குணமாய் விட்டது. வைத்தியனுக்கும் ராஜ வைத்தியனென்று பட்டம் உடனே வந்து விட்டது!

நரிக்கு நல்ல வரும்படி கிடைக்க





ஆரம்பித்தது. அதுவும் அதன் மனைவியும் சதா எதையாவது போட்டு அரைத்துக் கொண்டும் இடித்துக் கொண்டும் இருந்தன. ஆனால் அவைகளுக்குள் அடிக்கடி ஏதாவது சண்டை வந்து கொண்டே யிருந்தது.

புது வைத்தியர் காட்டிற்கு வந்து வருஷம் ஒன்றாயிற்று. ஒரு நாள் சிங்க ராஜா ரொம்பக் கோபமாக தடால், மடால் என்று அடி வைத்து நடந்து கொண்டிருந்தது. அதன் கண்கள் நெருப்பைக் கக்கின. காட்டிலுள்ள அதிகாரிகள் கொடுத்த ஜனன மரண கணக்கு தான் அதன் கோபத்திற்கு காரணம். "எல்லாம் உன்னால்தான்! நீ உன் பிள்ளைக்கு வைத்தியம் பார்த்த அழகு!" என்று மனைவியைக் கூப்பிட்டு அதட்டியது.

"ஏன்? வைத்தியம் பார்த்திருக்காட்டா என்ன ஆகி யிருக்கும் தெரியுமோல்லியோ?" என்று கேட்டது பெண் சிங்கம்.

"இதோ பார், இந்த ஒரே வருஷத்தில், காட்டில் எவ்வளவு மிருகங்கள் இறந்திருக்கின்றன என்று."

"அதுகளெல்லாம் வைத்தியனைக் கூப்பிட வில்லையோ என்னமோ?"

"வைத்தியனைக் கூப்பிடாம லிருந்தால் ஏன் சாகிறதுகள்? ஒன்றொன்றும் இந்த நரியாலேயே வைத்தியம் பார்க்கப்பட்டுச் செத்து விட்டன. இந்த நரியிடம் ஒரு வேளை மருந்து சாப்பிட்ட பிராணி எதுவும் இரண்டாம் வேளை சாப்பிட உயிரோடே இருந்ததில்லை! போதுமா? நம்ம நரஸிம்ஹனுக்கு ஆயுஸு கெட்டி. அந்த நரி கொடுத்த மருந்தில், அவன் மட்டும்தான் பிழைச்சான், தெரியுமா?" என்றது சிங்கம்.



அதே சமயத்தில் வைத்தியர் வீட்டு வாசலில் ஏக அமளி. "அடி, உதை, பிடி, விடாதே!" என்று கூவிக்கொண்டு மிருகங்கள் அதன் வீட்டுக் கதவை இடித்தன. நரி வீட்டுக் கதவு சாத்தியபடியே இருந்தது. நரியும் அதன் மனைவியும் முன் கூட்டியே யோசனை செய்து தீர்மானித்திருந்தபடி மூட்டை முடிச்சுகளுடன் வீட்டின் பின்புறமாக நடையைக் கட்டியிருந்தன!

# விகடன் பேச்சு



வீட்டுக்காரர் :— என்னடா எப்போ பார்த்தாலும் 'பசி பசி' யென்று பிராணனை வாங்குகிருய்! ஏதாவது வேலை வெட்டி செய்யேன்டா!

பிச்சைக்காரன் :— அதையும் பார்த்துட்டேனுங்க! வேலை செஞ்சா இன்னும் சாஸ்தியாப் பசியெடுக்குதுங்க!

* * *

ராகவன் :— இப்போ சங்கீத சபைக்குத்தான் போயிண்டிருக்கேன். பாட்டு என்ருலே எனக்குப் பயித்தியம்!

கிருஷ்ணன் :—அது தெரியும் எனக்கு. ஆனல் சங்கீதத்திலே மாத்திரம்தாளு என்றுதான் சந்தேகம்!

* * *

"உங்க ஊர் கீல் வாதத்துக்கு ரொம்ப சிலாக்யம்னு சொல்லிக்கிருளே! வாஸ்தவம்தாளு?"

"சந்தேகம் என்ன! எனக்கே அங்கே தான் கீல் வாதம் வந்தது!"

* * *

ஹோட்டல் காரர் முன் ஒரு சிப்பந்தி ஒரு மனிதனை இழுத்து வந்து நிறுத்தினன்.

ஹோட்டல் காரர் :—டேய்! நீதானே நேற்று நம் ஹோட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டுக் காசு கொடுக்காமல் ஓடினவன்?

மனிதன் :— ஆமாம், ஐயா!

ஹோட்டல் காரர் :— இனிமேல் அது மாதிரி செய்வாயா?

மனிதன் :— சத்தியமா அப்படிச் செய்ய மாட்டேனுங்க! நேத்து ராத்திரி பூராவும் நான் பட்ட வயித்து வலி ஆயுஸ் பூரா நினைப்பு இருக்குமே!

* * *

வழிப்போக்கன் :—என்னடா பெரிய தொந்தரையாப் போச்சு! போற போது ஒரு தரம் நோட்டீஸைக் கொடுத்தாய்; வர போதும் அதே நோட்டீஸைக் கொடுக்கிருய். இதை வைத்துக் கொண்டு என்னடா செய்கிறது?

நோட்டீஸ் கொடுப்பவர்:—அது தெரியாமே தானே நானே இதை எல்லாருக்கும் கொடுத்திண்டிருக்கேன்!

"தினம் உன் வீட்டுக்குப் பணத்திற்கு அலைஞ்சு கால் வலி எடுத்துப் போச்சப்பா! ஒரே வார்த்தையா சொல்லு இப்போ!"

"சரி! ஞாயிற்றுக் கிழமை அன்னிக்கு. உனக்கு செளகரியப் படுமா?"

"சரி, வரேன்!"

"ரொம்ப நல்லதாப் போச்சு! இனிமே ஞாயிற்றுக்கிழமை ஞாயிற்றுக் கிழமை வந்திண்டிரு!"

* * *

குடித்தனக்காரப் பெண் :—அம்மாமி! உங்க பிள்ளையைக் கொஞ்சம் கண்டியுங்கோ! திடுக் திடுக்குனு கதவைத் திறந்துண்டு எங்க உள்ளே வந்துடருன்...

வீட்டுக்காரி :— அப்படிப் பண்ண மாட்டானே! மொதல்லே சாவி ஓட்டையாலே பார்த்துட்டுத்தான் கதவைத் திறந்துண்டு வருவன்!

* * *

ஆபீஸ் மானேஜர் :— இங்கே வேலை காலியில்லைன்னு சொல்லிண்டிருக்கிறதுக்கே ஒரு ஆள் போட வேண்டும் போலிருக்கே!

வேலை கேட்க வந்தவன் :— அந்த வேலையையாவது நான் பார்த்துக் கொள்றேனே, ஸார்!

* * *

செட்டியார் :— ஐயரே! இப்போ இருபத்து ஐந்து ரூபாய் போட்டுத்தாரேன்... ஆறு மாசம் போவட்டும்...அப்புறம் முப்பத்தைஞ்சா உசத்துறேன் உம்ம சம்பளத்தை... இன்னிலேருந்து வேலைக்கு வரீங்களா?

ஐயர் :— ஆறு மாதம் கழிச்சே வரேன்!

* * *

சிநேகிதன் :—உன் சோளக் கொல்லை செழிப்பா வளந்திருக்குது...ஒரு பொம்மை கிம்மை வைக்கிறதுதானே?

குடியானவன் :— அதெல்லாம் என்னாத்துக்கு! என் சம்சாரந்தான் அங்கேயே எப்பவும் இருக்குதே!






# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்

(இந்தியாவில் 1933ல் ஸ்தாபிக்கப்பட்டது)

தலைமை ஆபீஸ் : மதுரை

PANDYAN INSURANCE COMPANY LIMITED

தீ விபத்து சம்பந்தமான சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 15,00,000 |
| இன்ஷ்யூரன்ஸ் நிதிகள் | ரூ. 20,84,422 |
| | ரூ. 35,84,422 |

கிளை ஆபீஸ்கள்

பம்பாய் :
லாயிட்ஸ் பாங்க் பில்டிங்
ஹார்ன்பி ரோடு, பம்பாய்.

அகமதாபாத் :
1761, காந்தி ரோடு
அகமதாபாத்.

பிரதம ஏஜண்டுகள்

ஏ. & எப். ஹார்வி

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

K. M. S. லெக்ஷ்மணய்யர் & சன்ஸ்

மதுரை, திண்டிவனம், மதராஸ், நகரி, பெஜவாடா, காகினடா, விஜயநகரம்

விவரங்களுக்கு மேலே கண்ட எந்த ஆபீசுக்கும் எழுதலாம்




சுந்தரம்

# 3 ப்ரம்மச்சர்யம்

## அத்தியாயம்—11

### மனோபல சிகிச்சை

இந்த உடல் நோய்க்கு மனக் கேடு, முக்கியமாக நிற்கிறது. செயற்கை தோஷத்தால் பழக்கம் கெடுகிறது. கெட்ட பழக்கம் செய்யச் செய்ய உள் மனதில் வேர் ஊன்றி விடுகிறது. உடல் அதிகம் கெடுகிறது.




இத்தீய சக்கரம் ஓயாமல் சுழன்று, சுடுகாட்டிற்கும் அவமானத்திற்கும் இழுத்துச் செல்கின்றது. உடல் கேடுக்குச் சிகிச்சையைக் கவனித்தோம். மனக் கேடும், கெட்ட பழக்கமும் ஒழிய வேண்டும். மூல காரணம் மனக் கேடு. கெட்ட பழக்கத்திற்குத் தூண்டுதல் இங்கிருந்தே வருகிறது. மனதைத் தாக்கவேண்டும். இதுவே பெருத்த கேள்வி. ப்ரம்மசர்யத்தின் வேர் இதில் தான் ஊன்றி நிற்கின்றது. இரண்டு உதாரணங்களை கவனிப்போம்.

இந்திரிய இயற்கை விரோத வெளிப் போக்கால் உடல் கெடுகிறது. இச்சா சக்தியும் குறைகிறது. தானாக இந்திரியத்தை வெளிப் போக்குவது ஒரு கொடூரச் செயல். இது நூற்றில் எழுபது இளைஞர்களிடம் குடி கொண்டிருப்பதாக அமெரிக்காவில் உலகக் கணக்கு இடுகிறார்கள். கொடுரமில்லை! மாத்திரைகளால் தவிர்க்க முடியுமா? உண்மையை மனமார அறிந்து யோகத்தைக் கைப்பற்றுவதே உலகிற்கு க்ஷேமம்.

ஒரு தரம் அழித்த பிறகு, பின்னும் அழிக்க மனம் தூண்டுகிறது. படிப் படியாக, இச்சா சக்தி குறைகிறது. மனம் இதற்கு அடிமையாகிறது, கடைசியில் இதை நிறுத்த வேண்டுமென்று உண்மையாய்ப் பிரயத்தனித்தாலும், மனோபலம் இராது. பழக்க வேகம் ஆளைத் தள்ளிக் கொண்டே செல்லும்! என்ன துர்க்கதி!

இன்னொரு வகையில், காமினி வாசனையானது, புயல் காற்றுப் போல் கங்குகரையின்றி வீசுகிறது. இது ஒரு காட்டுத் தீ. இதைத் திருப்தி செய்யச் செய்ய அக்னியில் நெய்யைக் கொட்டியது போல் வளர்ந்து கொண்டே போகும். பிந்து கழிய உடல் கெடுகிறது. மருந்தாலோ, பயிற்சியாலோ உடலைச் சரி செய்வதால் பிரயோசனமில்லை. முடிவு கிட்டாது. சற்று குணம் கிடைத்தவுடன் பழைய வாசனை மீறிக் கிளம்பும். திரும்பவும் இக் கெடுதியே சம்பவிக்கும். மனக் கேடே பெரியது. ஆத்ம சோதனையால் இந்த வாசனையை வேருடன் பிடுங்கி எறிய வேண்டும்.

இப்போது, 'சாந்தி யோகம்' தான் உண்மைத் துணைவனாக அமையும். அதில் கூறிய முறைகள் தான் குணத்தைக் கொடுக்கும். ப்ரம்மச்சர்யத்தின் உன்னத எல்லையை விளக்க வேண்டும்.

ப்ரம்மச்சர்யம் என்பதைப் பெரியார், திரிகரண சுத்தி என்றே விளக்குகிறார்கள். கல்யாணமாகாமல் இருப்பது என்று சொல்லவில்லை. ப்ரம்மச்சர்ய ஆச்ரமத்தில் புகுந்தவன், வாக்கு காயத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளலாம். மனது இச்சித்துத் துலாவ, சமஷ்டி லஜ்ஜைக்கு அஞ்சி, இவன் சும்மா இருந்தால், இவனிடம் ப்ரம்மச்சர்யம் இருப்பதாக எண்ணக் கூடாது.

அதே தர்மத்துக்கு இணங்கி, கிருகஸ்தாச்ரமத்தில் மித வாழ்க்கையில், காயத்தில் பிந்துவை இழந்ததால், இவன் ப்ரம்மச்சர்யம் இழந்தவனாக ஆக மாட்டான். இவன் மனம் கெட்ட இச்சை கொள்வதில்லை; வாக்கு கெட்டு குறைப்பதில்லை. திரிகரண சுத்தி பெற்று இவன் யோகத்தில் உன்னதம் பெறுவான். காலத்திலும் காயத்திலும் பிந்து கட்டுப்பட வாழ்க்கையில் வெற்றியடைவான்.

எப் பழக்கத்தால் கெட்டானோ அப்பழக்கத்தை விட வேண்டும் என்பது யாவரும் அறிந்ததே. வாக்கு சுத்தமடைய வேண்டும்: பிந்து கழியும் செயல்களையும் கெட்ட எண்ணங்களையும் உச்சரிக்கவும் கூடாது. மிகுதியாகுவது மனது. இத்துடன் கலந்து நிற்பது மனோபலம்; இச்சா சக்தி. இதற்குப் பிரார்த்தனை, சத்சங்கம், விசாரம் அல்லது மன சோதனை என சிகிச்சைகள்.

பிரார்த்தனை: மந்திரத்தால் மாங்காய் விழுமா என்றால், விழும்! நம்பிக்கைதான் காரணம். உண்மையாக, தீய பழக்கம் ஒழிந்து, ப்ரம்மச்சர்யம் கிட்ட வேண்டும் என்று விரும்ப வேண்டும். அகத்தை ஊடுருவி நிற்கும் சர்வேச்வரனை ஏமாற்ற முடியாது. பிறர் உபத்திரவத்திற்கோ, பேஷனுக்கோ, (Fashion) கோவில் சுற்றுதல் பலனைக் கொடுக்காது.

இஷ்ட தெய்வத்தின் சித்திரத்தின் முன் உட்காரவும். ஏகாந்தமே எடுத்தது. தன் உடல் அடைந்த கேட்டை நினைக்கவும். பல


பற்கள் ஆடுகின்றனவா?
ஆனால் அவைகளுக்கு
"தைமோஸின்"
சிகிச்சை அளியுங்கள்

ப்ரோச் பல் வைத்தியர் Dr C. M. தேசாய் L. D. S. அவர்களின் மருந்து முறைப்படி தயாரித்தது.

டூத் பிரஷ் அல்லது விரலினால் சில துளிகள் உபயோகித்தால் போதும். மாயமாக பற்களின் காவியை அகற்றி, சொத்தை விழுவதைத் தடுத்து, பற்களை ஆரோக்யமாயும் வெண்மையாயும் செய்து, பயோரியா, ஈறு சம்பந்தமான வியாதிகள், வாய் வேக்காடு, மற்றும் தொண்டை உபாதைகள் இவற்றைத் தடுக்கும். 2 அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2. தபால் பாக்கிங் சார்ஜ் தனி.

டென்டல் இன்ஸ்டிடியூட்
சேவ ஆஸ்ரமம், ப்ரோச்.

ஏஜண்டுகள்:
**T. M. தாகூர் & கோ.**
*1/10, ஸ்டிரிங்கர்ஸ் தெரு, மதராஸ்.*



2 கலர் வேலை! கண்ணைக்கவரும் அச்சு!!

**1944**

**'ஜைமினி' பஞ்சாங்கம்**

அதி அழகான ஷீட் காலண்டர்

ஆங்கில மாதத்திற்கு நேராக தமிழ் மாத பஞ்சாங்கம்—பின்புறம் பஞ்சாங்கங்களின் பல அம்சங்கள்—மற்றும் தினசரி வாழ்விற்கு அத்யாவசியமான அனேக விஷயங்கள்-ஸ்ரீ துளஸி ஆருட சக்கரம்—அருமையான பிளாக்குகள்—அழகான வேலைப்பாடு!

விலை 0—7—6. தனிப் பிரதிக்கு 12 அணா மணியார்டர் செய்க.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்

இன்னும் இருவித காலண்டர்கள், டயரி, இவை விற்பனைக்குத் தயார்,

விவரங்கட்கெழுதுக:

ஆற்காடு பிரஸ், விழுப்புரம்.

மற்ற கோழை நிலையை யோசிக்கவும். பயமின்றி சித்திரமே உயிர் கொண்டு, முன் அபயத்துடன் நிற்பதாக நம்பி, மனமுறுகி கோர நிலையைப் புலம்பி, வாய்விட்டு அலறவும். கண்களில் நீர் பெருகினால் நல்லதே.

"என் செய்வேன்! ஈசனே! எனதையனே! கெட்டேன் தீய வழக்கத்தால்! இதன் வேகத்தை என்னால் தடுக்க முடியவில்லை! கருணை ப்ரபுவே! என்னைக் காப்பாற்று! இக் கொடிய அசுரனின்றும் என்னைக் காப்பாற்று! அண்டாண்ட சராசரங்களை ரட்சிக்கும் உனக்கு இந்த ஏழை பாரமல்ல! அபயம்! அபயம்!! மஹா பிரபுவே! உடலை ரக்ஷி! மனதை சுத்தம் செய்! செய்!! கொடு ப்ரம்மச்சர்யம்!!!", என்று பல நிமிஷங்கள் பிரார்த்திக்கவும். மெய்ம்மறக்கவும். நிமிர்ந்து உட்கார்ந்து அசைவற்ற மனதில் "ப்ரம்மச்சர்யம்!" என்று பல நிமிஷங்கள் தியானித்து, தண்டனிட்டு எழுந்திருக்கவும். காலை மாலை இரு வேளைகள் செய்யவும். சிலர் உடனே பலன் பெறுவார். சிலர் சிறிது நாட்களில் பயன் அடைவார்கள். கண்டிப்பாய்க் காப்பாற்றப் படுவார். இது சத்தியம்!

காமக் கொடூரனைக் கெட்டலைந்து, உடல் அழுகிச் சொட்ட, கோபுரத்திலேறிக் கீழே விழுந்து உயிர் துறக்க யத்தனித்த அருணகிரியைக் காத்த அருள் வெள்ளம் இன்னும் ஆரவாரித்து நிற்கின்றது! இதை நம்புங்கள்! "கொண்டா காமினியை! சம்கரிக்கிறேன்!" என்று கர்ஜித்து நிற்பதை நீங்களும் அகத்தில் அறியலாமே!

'காமினி!' என்பது காம வெறியைக் குறிக்கும் பதம். பெண்கள் தூஷணை யன்று. தர்மத்திற்குக் கட்டுண்டால், காமத்தைப் போக்கிக் கரை சேர்க்கவும், ஸ்திரீ ரத்னங்களே உதவுகிறார்கள்!

சத் சங்கம்: இதன் பலனும் "சாந்தி யோக"த்தில் நன்றாக விளக்கப் பட்டிருக்கிறது. நல்ல புஸ்தகங்களை படிப்பது, நல்ல எண்ணங்களையே கொள்வது, தேவர் நாமங்களை நினைத்து நிற்பது, உண்மை சாதுக்களைப் பணிந்து நேசிப்பது. இதெல்லாம் மனோ பலத்தை அதிகரித்துப் பழக்கத்தை ஒழிக்கும்.

மன சோதனை: இவ்வாறு சிந்திக்கவும். "ஆனந்தத்தை நாடுகிறேன். உண்மையில் காமினியிலா இது இருக்கிறது? அப்படியானால் சுஷுப்தியில் காமினி ஸ்பர்சம் கிடைத்தால், சுகம் ஒன்றும் ஏற்படுவதில்லையே. இல்லை; ஆனந்தத்திற்குக் காரணம் நான் தான். ஆசையால் அலைந்த மனம் திருப்தி யடைய என்னை, ஆத்மாவை நாட, சுகத்தை அனுபவிக்கிறது. தப்பாக, காமினியால் சுகமென்று எண்ணுகிறேன். சீ! இதில் சுகமில்லை. காமினி துக்க ரூபம். முற்றிலும் இது துக்கம். விட்டேன் இதை! இனித் தொடேன். நானே சுகம்! நானே ஆனந்தம்!" என்று சிந்திக்கவும்.

பின் ஸ்ரீ சங்கராச்சாரியார் கூறியதை அடிக்கடி மனதில் அர்த்தத்துடன் புரட்டிக் கொள்ளவும். சிந்தனை செய்து நலன் பெற்று தன்னையும், சமூகத்தையும் ரட்சித்துக் கொள்ளவும்.

**नारीस्तन भरनाभिनिवेशं**
**मिथ्यामाया मोहावेशं ।**
**एतन्मांस वसादिविकारं**
**मनसिविचारय वारं वारं ।**

நாரிஸ்தனபரநாபிநிவேசம்
மித்யாமாயா மோஹாவேசம்।
ஏதன் மாம்ச வசாதி விகாரம்
மனஸி விசாரய வாரம்
வாரம் ॥

பெண்ணின் உடலை இச்சித்து ப்ரவேசிப்பது, பொய்யான மாயா மோஹத்தால் ஏற்பட்ட வேகம்! இது (மல மூத்ராதிகள் நிறைந்த) மாம்சங்களால் ஏற்பட்ட விகாரமென்று மனசில், சர்வதா சிந்திக்கவும்! — ஸ்ரீ சங்கராச்சார்யர்.

'ப்ரம்மச்சர்யம்'
முற்றிற்று.


# கரப்பானை குணப்படுத்த எக்ஸ்மா - (X-MA)




மற்றுமொரு நற்சாக்ஷி பத்திரம்

அன்பார்ந்த ஐயா,

தயவுசெய்து வி. பி. பி. மூலம் மற்றுமொரு ஜாடி எக்ஸ்-மா மெழுகும், ஒரு டின் வேர்க்குரு பௌடரும் அனுப்பிவைக்கவும்.

நான் முன்பு வாங்கின எக்ஸ்-மா மருந்து அதி விரைவில் குணமளித்தது. ஆகையால் எப்பொழுதும் கைவிருப்பில் ஒரு ஜாடி வைத்திருக்க எண்ணுகிறேன். இதில் ஏற்பட்ட சம்பிக்கை உங்கள் வேர்க்குரு பௌடரை உபயோகிக்கத் தூண்டுகிறது. மேலும் வேறு எதுவும் நிச்சயமாக குணமளிக்கவில்லை. இப்படிக்கு,

(ஒப்பம்)..............................

பிரசித்திபெற்ற ஸ்பென்ஸர் சரும வியாதி நிவாரணி, கரப்பான், மற்றும் அதுபோன்ற சரும வியாதிகளை நிவர்த்திப்பதில் கீழ்நாடெங்கும் பிரக்யாதி பெற்றது. ஒவ்வொரு தபாலிலும் இந்த மருந்து வேண்டுமென்று ஆர்டர்கள் குவிந்தவண்ண மிருக்கின்றன. இதன் அபார விற்பனையே இதன் குணத்திற்குச் சான்று.

முன்பு "ஸ்மித்ஸ் அங்குவென்டம் டெட்டர்ஜென்ஸ்" என வழங்கிவந்த மருந்து சருமத்தில் ஏற்படும் எல்லா உபாதைகளுக்கும் இதமளிப்பதில் சிறந்து விளங்கிற்று. இப்பொழுது எக்ஸ்-மா ஒன்றுதான் கரப்பான், வண்ணாரப் படை, வீக்கம் இவற்றிற்கு எரிச்சலின்றி குணமளித்து வருகிறது.

கைத்திட்டமான சைஸ் பாட்டில் ஒன்றுக்கு விலை ரூ. 1/4/-

**உபயோகிக்கும் முறை** வியாதியுற்ற பாகத்தில் காலையிலும், மாலையிலும் நன்றாகத் தேய்க்கவும். கூடுமானவரை காற்றுப் புகாவண்ணம் மிருதுவான துணியினால் மூடி வைக்கவும்.

ஸ்பென்ஸர் கம்பெனியாரால் மட்டுமே இது தயாரிக்கப்படுகிறது.

வியாபாரிகள் விவரங்களுக்கு எழுதவும்:

**ஸ்பென்ஸர் & கோ., லிட்.**

மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ் :: சென்னை

# அண்ணனும் தங்கையும்

"லக்ஷ்மி"

சாரதாவிற்கு அன்று எதிலுமே மனம் செல்லவில்லை. "இன்னிக்காவது சினிமாவுக்குப் போகணும், அம்மா!" என்று குழந்தைகள் கூக்குரலிட்டதும், "அம்மா! டிபனுக்கு நெய் கொடுக்கலையே!" என்று சமையற்காரன் நச்சரித்ததும் அவள் காதுகளில் விழவில்லை. "சாரதம்! என்ன ஒரு மாதிரியா யிருக்கியே? நேற்று ராத்திரி உன் அக்கா ஊருக்குப் போனதிலிருந்து உனக்கும் பாலையூருக்குப் போகணும்னு ஆசை வந்துட்டதாக்கும்" என்று அவள் கணவன் நாகராஜன் அவளிடம் ஹாஸ்யம் பண்ணியது அவளுக்குப் பிடிக்கவே இல்லை.

"அவன் வீட்டிற்கு யார் போவா? எனக்கென்னவோ பழைய கதையெல்லாம் அக்கா வந்துட்டு போனதிலிருந்து ஞாபகத்துக்கு வந்தது. மனசு கஷ்டப்படறது. அவ்வளவு தான்" என்று பதிலளித்து விட்டு மாடிப் பக்கம் சென்று விட்டாள்.

அப்படி அவள் மனவேதனைப்படப் பழைய சம்பவங்களை நினைப்பூட்டினவள் அவள் அக்கா ஜயலக்ஷ்மி. பம்பாயில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள். பாலையூருக்குப் போக வேண்டியவள் வழியில் சென்னையில் தங்கை வீட்டில் இரண்டு நாள் 'காம்ப்' போட்டு விட்டாள்.

"அண்ணா ரெண்டு மாசமா படுத்த படுக்கையாகக் கிடக்கிறானாம். பிழைக்கறது அபூர்வம் என்று டாக்டர் சொல்லி விட்டாராம். உடனே வரணும்னு மன்னி லெட்டர் மேலே லெட்டர் போட்டா. என்னவோ நமக்கு இருக்கறது கடுகத்தனை தமையன் ஒத்தன் தான். பார்த்துட்டு வரலாம்னு வந்தேன்" என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் ஜயலக்ஷ்மி.

"அப்படியா?" என்றாள் சாரதா.

"பெரிய அக்கா ராஜத்துக்குக் கூட மன்னி லெட்டர் போட்டிருக்காளாம். 'அவளும் வந்துடுவா, நீங்க கட்டாயம் வரணும்'னு மன்னி எழுதியிருந்தா. உனக்கு லெட்டர் ஒன்றும் வரலையாக்கும்?" என்று தொடர்ந்தாற்போல் ஜயலக்ஷ்மி கேட்டபோது சாரதாவிற்கு அவமானமாகத் தான் இருந்தது.

ஜயலக்ஷ்மி ஊருக்குப் போய் விட்டாள். ஆனால் அவள் தன் அண்ணனைப் பற்றிச் சொன்ன விஷயம் சாரதாவின் மனதில் புகுந்து கொண்டு பலவித உணர்ச்சிகளை உண்டாக்கியது. பத்து





வருஷமாகத் தன்னுடன் மனஸ்தாபத்தினால் பேச்சு வார்த்தையின்றி யிருக்கும் அண்ணனை ஒரு நிமிஷம் நினைத்துக் கொள்ளும் போதெல்லாம், அவள் மனதில் கோபத்தின் புயல் வீசிற்று. அடுத்த கணம் தன் இரு சகோதரிகள் மட்டும் பிறந்தகத்திற்குப் போய்ச் சீராடுகையில் தான் மட்டும் ஜாதி ப்ரஷ்டம் செய்யப் பட்டவள் போல் அங்கே தலை காட்டாமல் இருப்பதை நினைத்துக் கொண்டாள். இருதயமே வெடித்து விடும்படி துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

* * *

சாரதாவின் தகப்பனார் பாலையூரில் பத்து வேலி பூஸ்திதி கொண்ட செல்வாக்குடைய மிராசுதாராக இருந்தார். அந்த சொத்தை ஆள்வதற்குச் சுந்தரேசன் என்று ஒரே பிள்ளையும் அழிப்பதற்கு மூன்று பெண்களும் பிறந்தனர். சாரதாவின் தந்தை சுபாவத்தில் கொஞ்சம் படாடோபமான ஆசாமி. மூத்த இரண்டு பெண்களையும் நல்ல இடத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுத்ததில் கடன் அதிகம் ஏற்பட்டு, பத்து வேலி நிலத்திற்கும் ஆபத்து வந்து விட்டது. கடைசிப் பெண்ணான சாரதாவை அவளுடைய சகோதரிகளைப் போல் உயர்ந்த இடத்தில் கல்யாணம் செய்து கொடுக்க முடியாமல் அவர் கை சளைத்துப் போய் விட்டார். குமாஸ்தா வேலை பார்த்துக் கொண்டிருந்த நாகராஜன் தான் மாப்பிள்ளையாக அகப்பட்டான். கல்யாணம் ஆன மறு வருஷமே தகப்பனார் கண்ணை மூடிவிட்டார்.

சாரதா கணவனுடன் குடித்தனம் செய்து மூன்று வருஷங்களில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயானாள். அந்த வருஷம் என்னவோ ஏழரை நாட்டுச் சனியன் அவளைப் பிடித்துக் கொண்டு விட்டது. அவள் புருஷன் வேலை பார்த்து வந்த கம்பெனி திடீரென்று மூடப்படவே, அவனுடைய வேலையும் போய் விட்டது. தனக்கு வேறு உத்யோகம் கிடைக்கும் வரை அவளைப் பிறந்தகத்தி லிருக்கும்படி நாகராஜன் அனுப்பி யிருந்தான்.

சுந்தரேசன் மனைவி விசாலத்தின் பிறந்தகம் பலத்தகை. அவளுடைய தந்தை தமது ஒரே பெண்ணிற்குத் தமது சொத்தையெல்லாம் எழுதிவைத்து விட்டுப் போயிருந்தார். மனைவி கொண்டு வந்த சொத்தினால் தான் சுந்தரேசன் பழைய அந்தஸ்தை அடைய முடிந்தது. அதனால் அவன் மனைவி வார்த்தைக்கு மறு வார்த்தை யின்றி நடந்து வந்தான்.



சாரதா தன் இரு குழந்தைகளுடன் பிறந்தகத்திற்கு வந்து சேர்ந்தது விசாலத்திற்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. அது வரை சமைத்துக் கொண்டிருந்த

சமையற்காரனை நிறுத்தி விட்டு, சாரதாவையே சமையற்காரியாக்கி விட்டாள் விசாலம்.

இடுப்பில் சாவிக் கொத்தைச் சொருகிக் கொண்டு, பட்டுப் புடவை தரையில் புரள மேலும் கீழும் உலாவிக் கொண்டிருப்பாள் விசாலம். தான் வந்த ஒரே வருஷத்தில் சாரதாவிற்குப் பிறந்தகத்து வாழ்வு போதும் போதுமென்றாகி விட்டது. தன் தாயின் நிர்ப்பந்தத்திற்காகப் பொறுமையுடன் அங்கே நாட்களைத் தள்ளிக் கொண்டு வந்தாள்.

அன்று சுந்தரேசன் இரண்டு புடவைகள் வாங்கிக் கொண்டு வந்திருந்தான். ஒன்று சாரதாவிற்கு, மற்றொன்று அவன் மனைவிக்கு. சாரதா தன் புடவையை எடுத்துப் பார்த்தபோது அது மிகவும் மட்ட ரகமான புடவையாயிருப்பதைக் கண்டு மனம் கசந்தவளாய், "வாங்கித் தந்தேன்னு பேர் வாங்கிண்டு அண்ணா இப்படி ஒரு புடவை வாங்கித் தரா விட்டால் என்ன? வேலைக்காரி கூடக் கட்டிக்க மாட்டா இதை" என்று தன் தாயிடம் ரகசியமாகக் கூறினாள். அந்த சமயம் அகஸ்மாத்தாக அங்கே வந்த விசாலம் அதைக் கேட்டு விட்டுக் காளி போல் சண்டைக்கு வந்து விட்டாள்.

"தானங் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடுச்சுப் பார்க்கறயே! ஆம்படையான் படைச்ச லட்சணத்திற்கு இந்தப் புடவை போதாதாக்கும்? ஒரு மனுஷன்—வெட்கங் கெட்டவன் — பெண்டாட்டியையும் குழந்தையையும் ஒரு வருஷமா பிறந்த வீட்டில் விட்டு வச்சிருக்கானே! ஏதோ நமக்குச் சாப்பாடு போடறானேன்னு நன்றியில்லாமல் அண்ணா மேலே கோள் சொல்லிண்டு திரியறயே! ஆட்டுக்கும் வால் அளந்துதான் வச்சிருக்கார்" என்று பட படப்புடன் கத்தினாள்.

"மன்னி! உனக்கு நான் இங்கிருப்பது இஷ்டமில்லா விட்டால் போய் விடறேன். அவ்வளவுதானே?" என்று சாரதா விம்மினாள். தன் கணவனை மன்னி தூக்கி எறிந்து பேசியது அவளால் தாங்க முடியவில்லை. அவமானம் தாங்காதவளாய்த் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். அந்த சமயம் பார்த்து அவள் தமையன் சுந்தரேசன் வந்தான். சாரதா அழுது கொண்டிருப்பதைக் கவனித்து, "என்னடி சாரதம்?" என்று கேட்டான்.

அதற்குள் விசாலம் ஓடி வந்து "உங்கள் தங்கைக்கு ஒண்ணும் வந்துடலை! இங்கே இருக்கறத்துக்குப் பிடிக்கலையாம். ஊருக்குப் போறாளாம்" என்று கத்தினாள். பிறகு தட தடவென்று தனக்கும் சாரதாவிற்கும் ஏற்பட்ட விவாதத்தைப் பற்றிக் கணவனுக்கு விஸ்தாரமாக எடுத்துக் கூறினாள்.

சுந்தரேசன் அலக்ஷியமாக, "இங்கே யாரையும் இருக்கச் சொல்லி நான் நிர்ப்பந்தப்படுத்தலையே!" என்றான்.

"எல்லாம் சீரும் சிறப்புமா இருந்தாத்தான் தங்கைபோல இருக்கு! ஏழையாப் போயிட்டா தங்கை யில்லையோ?" என்று சாரதா அண்ணாவைப் பார்த்துக் கொண்டு விக்கினாள்.

"பணம் இல்லாத மனுஷா பிணத்திறகும் கேடு கெட்டவாதான். தங்கையின்னு சொல்லிக்கக்கூட எங்களுக்கு அகௌரவதைதான்" என்று மன்னி மேலே அதற்கு பதில் சொன்னது சாரதாவின் கோபத்தைத் தூண்டி விட்டது.

"பணம் பணம் என்று அடித்துக் கொள்ளாதே! இந்த பணத்தை நானும் ஒரு நாள் காணாமல் போகப் போவதில்லை! அப்போ நீங்கள் என்கிட்டக் கையேந்தி நிற்கறச்சே, நாய் கேட்கிறேன்" என்ற வார்த்தைகள் அவள் உதடுகளில் துடித்தன. ஆனால் வெளி வரவொட்டாமல் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

சாரதா பிடிவாதமாகத் தன் கணவனுக்கு உடனே தந்தி கொடுத்து மறு நாளே ஊருக்குக் கிளம்பி விட்டாள்.

வருஷங்கள் பல சென்றன. அவள் தாயார் இறந்து விட்டாள். அதற்குக் கூட அவள் பிறந்தகம் போகவில்லை. அவள் சகோதரனும் கடிதம் போடுவதில்லை. எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தாள். ஒரு தடவைகூட அவள் பிறந்தகத்திலிருந்து உதவியை நாட முயற்சித்ததில்லை.

கடைசியில் அவளுக்கும் நல்ல காலம் பிறந்துவிட்டது. நாகராஜன் வேலை பார்த்து வந்த கம்பெனியில் எஜமானனுடைய நன் மதிப்புக்கு அவன் பாத்திரமாகவே, சீக்கிரத்தில் மானேஜர் பதவிக்கு வந்து விட்டான். கையில் கொஞ்சம் பணம் சேரவே சொந்த வீடும், காரும், சமையற்காரனும் ஆறுமாகப் பணக்காரர்கள் கோஷ்டியில் சாரதா சேர்ந்துவிட்டாள். நடந்து போன விஷயங்களை யெல்லாம் நினைத்துக் கொண்ட சாரதா துக்கந் தாங்காதவளாய், 'இந்தப் பணம் இல்லை யென்று ஒரு காலத்திலே அண்ணா என்னை அவமதித்தானே! அவனைத் திருப்பிக் கேட்கிற காலம் எப்போ வரும்' என்று பெருமூச்சு விட்டாள்.

அவள் அக்கா திரும்பித் தன் ஊருக்குப் போகும் போதும் இரண்டு நாள் தங்கை வீட்டில் தங்கினாள்.

"அண்ணா ரொம்ப பலஹீனப்பட்டுப் போயிட்டான். இப்ப என்னவோ பிழைச்சுட்டான். இன்னும் ஒரு ஜுரத்திற்கு அவன் தேகம் தாங்காது" என்றாள் ஜயலக்ஷ்மி.

"என்ன வியாதி அப்படி, தேகம் பலஹீனப்பட?" என்று சாரதா வினவினாள்.

"வியாதி ஒண்ணு மில்லை! எல்லாம் மன வியாதிதான். கடனும் உடனும் ஜாஸ்தியாய்ப் போய், நிலம் கிலம் எல்லாம் போயிடுத்து. அதே கவலை அவனை உருக்கி விட்டது" என்று அங்கலாய்த்துக் கொண்டாள் ஜயலக்ஷ்மி.

"மன்னியாவது உடம்புக்கு ஒண்ணுமில்லாம இருக்காளோன்னோ?" என்று சாரதா கேட்டு வைத்தாள்.

"மன்னி பழைய மன்னியாவா இருக்கா! காதிலே கழுத்திலே ஒண்ணு கிடையாது. இந்தப் பணக் கவலையிலே அவ தலை யெல்லாம் நரைத்து, இந்த வயசிலேயே கிழவியாயிட்டா. பிறந்தகமின்னு சொல்லிக்க அங்கே இனி ஒண்ணு மில்லே!" என்று ஜயலக்ஷ்மி பிரசங்கித்து விட்டு ஊருக்குப் போய் விட்டாள்.

அன்று சமாசார மெல்லாம் மனைவி மூலம் அறிந்த நாகராஜன் "இந்த சமயம் விரோதத்தை மறந்து உங்கண்ணாவைப் போய்ப் பார்த்துட்டு வா" என்று சாரதாவை வற்புறுத்தினான்.

"ஒரு கடிதாசு கூடப் போடாதவா வீட்டுக்கு நான் ஏன் போவேன்?" என்றாள் சாரதா பிடிவாதமாக.

"ஒரு சமயம் உங்கண்ணா செத்து போய்விட்டால் அப்புறம் நீ வருத்தப்படுவே! அவா கூப்பிடாட்டாலும் நீயாகப் போய் இறங்கு. மன்னி இப்ப உன்னைப் பணக்காரின்னு கட்டாயம் உபசாரம் செய்வா" என்று சாரதாவை நாகராஜன் பரிகாசம் செய்தான்.

"போனால் கூட மன்னியை 'ஏண்டியம்மா, ஏழைன்னு என்னை




## குலதனம்

போலக் கேச தனமும் சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேச தனம் படைத்தவர் அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக் கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக் கொண்டு அதை அடையுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்து வருவதால், இதுவரை வழுக்கைகளைத் தடுத்து கேச ஆரோக்யத்தையும் கேச சம்பத்தையும் தவருமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவன் தேகப் பயிற்சி ஆகாரங்களால், பருத்து அழகிய சதைக் கட்டைப் பெறுவதுபோல, அற்ப கூந்தல் படைத்தவரும், கேசவர்த்தினியைக் கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

போலிகளை வாங்கி மோசம் போகாதீர்கள். "கேசவர்த்தினி" "தென் இந்திய ரஸாயன சாலை" என்ற பெயர்களைக் கவனித்து வாங்குங்கள்.

# கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணு 12. (மேற் செலவு வேறு)

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :

**தென் இந்திய ரஸாயன சாலை**

கோயமுத்தூர்


விரட்டினயே, இப்போ யார் ஏழை?' என்று கேட்காமல் மட்டும் நான் வர மாட்டேன்" என்று சபதம் கூறினுள்.

* * *

சாரதா தன் தமையன் வீட்டிற்கு அவன் கூப்பிடாமலே சென்று நான்கு நாள் அங்கிருந்து விட்டுத் திரும்பினுள். வரும்போது அவள் கையை பிடித்துக் கொண்டு ஒரு சிறு பையன் உள்ளே நுழைந்தான்.

"இவன் என் அண்ணு பிள்ளை. படிக்க வசதி இல்லாமல் கிராமத்திலே காலியாப் போருன்னு, இங்கே உடன் பக்கம் அழைச்சுண்டு வந்தேன்" என்று முடித்து விட்டு, "ரகு, உள்ளே போடா!" என்று அன்புடன் அந்தக் குழந்தைக்கு உத்தரவிட்டாள்.

"மன்னியைக் கேட்டாயா வயிற்றெரிச்சல் தீர?" என்று கேட்டான் நாகராஜன்.

"இல்லை" என்று பதிலளித்தாள் சாரதா. அவள் கண்கள் கலங்கின.

"எனக்குத் தெரியும் நீ கேட்க மாட்டாய் என்று!" என்று சிரித்தான் நாகராஜன்.

"எப்படிக் கேட்கிறது! 'என்னைப் போல் சீரும் சிறப்புமா யிருந்தா கேட்டால் நியாயம். தரித்திரத்திலே மனசு உடைஞ்சு கஷ்டப்படறச்சே, நான் வேறே மனசைப் புண்ணுக்கணுமா!' என்ன இருந்தாலும் என் கூடப் பிறந்த அண்ணு தானே? நான் அசட்டுத்தனமா அவள் கிட்ட விரோதம் பாராட்டினேன். என்னைக் கண்டதும் 'சாரதா'ன்னு கட்டிக் கொண்டு அழுது விட்டாள்" என்று கூறி விட்டுச் சாரதாவும் தலைப்பால் முகத்தை மூடிக் கொண்டாள்.

நாகராஜன் மௌனமாக மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.


## "பகுத்தறிவு''ப் போட்டி - 370




**முடிவு தேதி 29-1-1944**

பிரவேசக் கட்டணம் கூபன் ஒவ்வொன்றிற்கு அணு 8.

முதற் குறிப்பு (இடமிருந்து வலமுள்ளது) சொத்தும் நிறைய இருந்து, பிள்ளையும் இல்லாது போய் விட்டால், யாரையாவது இது எடுத்துக் கொள்ளுவார்கள் என்றிருக்கிறது. நெ. 1. கட்டத்திலிருந்து இடமிருந்து வலமாக ஐந்து வெள்ளைக் கட்டங்களிருக்கின்றன. ஆகவே நெ. 1. குறிப்பிற்குச் சரியான வார்த்தை ஐந்து எழுத்துக்கள் கொண்டது என்பது தெரிகிறது. சுவீகாரம் சரியான விடை. வெள்ளைக் கட்டத்திற் கொரு எழுத்து வீதம் எழுதப்பட்டிருக்கிறது. இது மாதிரி எல்லா விடைகளையும் கண்டு பிடிக்க வேண்டியது.

(மற்ற விதிகள் முன்பு இருந்தது போல்தான்)

"பகுத்தறிவு''ப் போட்டி - 370



பெயர்.

விலாசம்.

ம. ஆ. ரசீது நெ.

கூபன் நெ......

# " பகுத்தறிவு "ப் போட்டி - 370 - குறிப்புகள்

**இடமிருந்து வலம்**

1. சொத்தும் நிறைய இருந்து, பிள்ளையும் இல்லாது போய் விட்டால், யாரையாவது இது எடுத்துக் கொள்ளுவார்கள்.

6. பாடகருக்கு இது அடைத்துக் கொண்டால், பாட்டு எப்படியிருக்கும்?

7. இது என்ருல் இத்திக்கும் என்று சொல்ல வேண்டுமா?

9. மண் பானைக்கு இந்தப் பெயரும் உண்டு.

10. இது ஒரு மிருகம்.

12. பல சாமான்களுக்கு இப்பொழுது இது வந்திருக்கிறது.

13. இதிலும் ஒரு அழகு உண்டு.

16. சிலருடைய இது தமாஷாகவே இருக்கும்.

17. இதைக் கண்டாலே, 'ஏ அப்பா!' என்று பயப்படுவர் சிலர்.

18. பெண் யானை.

19. 'ஒன்று ......வாரும் ஜகத்தீரே!' என்று உலக ஒற்றுமையை விரும்புவோர் கூறுவர்.

21. பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைத்தால், கூடு விட்டு இங்கு இது போன பிறகு யார் அனுபவிப்பார் அந்தப் பணத்தை?

22. குழைந்த வயிறு.

**மேலிருந்து கீழ்**

1. 'இது கண்ட இடத்தில் பிள்ளையைப் பெறு என்ருல் முடியுமா ஐயா?'

2. இது பெரிதா, காரியம் பெரிதா?

3. நெல் நிறைய விளையும் தமிழ்நாட்டிலே அரிசிக்குப் பஞ்சம் என்ருல், அதுவும் ....தானே?

4. இதன் மீது ஏறி ஆடினுல் தான் அதில் உள்ள சிரமம் தெரியும்.

5. இது ரொம்ப நீண்டு விட்டாலும் தவறுதான்; இங்குள்ளதுபோல் குறைந்து போனுலும் மோசம்தான்.

6. வெள்ளை வெளேரென்றிருக்கும் இப்பறவை.

7. நல்ல கார் இருந்தால், எங்கு வேண்டுமானுலும் ......... என்று போகலாம்.

8. பண்டைய வழக்கங்களை அனுசரிப்பவரைப் பார்த்து, இந்நாளைய ஆசாமிகள், 'சுத்த இதாக இருக்கிருயே' என்பார்கள்.

11. இப்படியாக, காயம்படாமல் க்ஷவரம் செய்கிறவர்களை சாதாரணமாக கிராமங்களில் காண்பதரிது.

12. இதன் விலை இப்பொழுது ஏகமாக இருந்தாலும், நகைக் கடைகளிலே கூட்டத்திற்குக் குறைவில்லை.

14. இவர் விரும்புவது மயான பூமிதான்.

15. பொதுவாக எந்த இதனிடமும் சேஷ்டை செய்யக்கூடாது.

16. பெரிய குரங்கு.

19. இது கட்டுகிறவர் பெண் பிள்ளை.

20. தங்களுடைய இது போவதாக இருந்தாலும், சிலர் தாங்கள் பிடித்த பிடியைமட்டும் விடமாட்டார்கள்.

21. அரசனை நம்பி, புருசனை விட்டு, அரசனும் புருசனும் இதோடு போனுர்கள் என்றொரு கதை உண்டு.





## “பகுத்தறிவு”-364 முடிவு

**முதற் பரிசு ரூ. 1000**

47 பேர்களுக்கு : தலைக்கு ரூ. 21-4-0

சரியான விடை அனுப்பிய கீழ்க்கண்ட 47 நபர்களுக்கும் முதற்பரிசுத் தொகையான ரூ. 1000மும் சமமாகப் பங்கிடப்பட்டு தலைக்கு ரூ. 21-4-0 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

முதற் பரிசுத் தொகை 24-12-43 அன்று அனுப்பப் பெற்றது.

2வது பரிசு பெற்றவர்கள் ஜாபிதா அடுத்தவார ‘நாரத’ரில் வெளியிடப்படும்.

(1) டி. பி. ராகவராவ், 22, அம்மன் கோவில் தெரு. பி. டி. சென்னை. (2) வி. பத்மாக்ஷி அம்மாள், 1/23எ, வெங்கட்டராமய்யர் தெரு. மின்ட் பில்டிங். (3) கே. ஜானகி, 154. லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை. (4) என். பெருந்தேவி, 96, பிராடீஸ் ரோடு. மயிலை. (5) எம். எஸ். லோகநாத முதலியார், “செல்டேல்” வேப்பேரி.. (6) மு. நாகரத்தின முதலியார், 4. மேல சன்னதி, சிதம்பரம். (7) வி. மகாதேவராவ். டி. டி. இ.. எஸ். ஐ. ஆர்., விழுப்புரம். (8) பத்மாவதி. 1150, தீர்த்தகுளத் தெரு, திண்டிவனம். (9) சி. வி. துரைசாமி அய்யர். குமாரசாமி கோயில் தெரு. திருப்பத்தூர். (என். ஏ.) (10) டி. பட்டம்மாள். 1639, நாணயக்கார செட்டித் தெரு. தஞ்சை. (11) புஷ்பவல்லி அம்மாள், c/o எம். நாராயணசாமி, அ. தெற்கு வீதி, மாயவரம். (12) எம். அஹமத் சாயபு, தென்மட விளாக வீதி, வலங்கைமான். (13) ராஜம், c/o ராமசாமி அய்யர், 8, நடவகானத் தெரு, திருவாரூர். ((14) எஸ். எஸ். மீனாக்ஷி, 44, வடக்கு வீதி. திருவாரூர். (15) ஆர். எஸ். கிருஷ்ணமூர்த்தி, வாழ்குடி. (16) எம். நமசிவாயம், 35, குஜிலித் தெரு, திருச்சி. (17) என். லக்ஷ்மி அம்மாள், 22, வன்னியடித் தெரு. மலைக்கோட்டை. தெப்பக்குளம். (18) எஸ். ரங்கராஜு, c/o ஆர். சங்கிலி கொத்தனார். வாழைக்காய் வியாபாரம், குளித்தலை. (19) எ. ஜெ.சாமி அய்யர். பள்ளத்தெரு. மதுரை. (20) பி. எஸ். கோபாலய்யர். கூட் ஷெட் தெரு. மதுரை. (21) டி. பி. வெங்கடாசலபதி அய்யர். 45, சிங்காரத் தோப்புத் தெரு, மதுரை. (22-23) ஆர். சப்தரிஷி, காளிமுத்து பிள்ளை சந்து, திண்டுக்கல். (24) எம். வள்ளிநாயகி. w/o வி. எக்ஞமய்யர், உத்தமபாளையம். (25) வீர. கரு. ச. அளகப்பன், சிவன் கோவில் மேல்புரம். தேவகோட்டை. (26) ஏ. ஜான்சுந்தர ராஜ். 224, ஜி. ஸி. ரோடு. தூத்துக்குடி. (27) பூ. சங்கரநாராயண பிள்ளை, சைகில் ஷாப், வீரவநல்லூர். (28) ச. சங்கரலிங்கம் அடவியார், பள்ளிவாசல் தெரு, வீரவநல்லூர். (29) வலர்தம்மாள், c/o ஆர். சுப்ரமண்யய்யர், சேல்ஸ்மேன், ராமனுதபுரம். கோவை. (30) வெ. ராமய்யர், ராயல் கேப், தளிரோட், உடுமலைப்பேட்டை. (31) எம். கே. சுப்பராய செட்டி, சேனாபதி செட்டிபாளையம். (32) கே. கோவிந்த கண்டர். ஜவுளி வியாபாரம், வாட்டர்பால்ஸ். அட்டக்கட்டி. (33) எம். எஸ். ராமய்யர், காபி கிளப். பெருந்துறை. (34) ஆர். நாராயணசாமி ரவுத். எண்ணெய் வியாபாரம், செவ்வாப்பேட்டை. சேலம். (35) மா. வெங்கிடப்ப நாயுடு. 18/559, கிச்சிப்பாளையம், சேலம். (36) என். வி. சிவசங்கரய்யர். c/o எம். கே. கனகரத்னம், சன்னதித் தெரு, நாமக்கல். (37) வாதுல. எஸ். ராமஸாமி. வெள்ளிப் பிள்ளையார் கோவில் அக்ரஹாரம், ஆத்தூர். (38) எஸ். மாணிக்கம் செடடியார, ரிடயர்டு காம்பவுண்டர். வேலூர். (சேலம்.) (39) பத்மாவதி அம்மாள். c/o பா. வெ. க. நல்லையா பாகவதர், ஜவுளி வியாபாரம், கீழராஜ வீதி, புதுகோட்டை. (40) எ. பால்வாணமய்யர், அம்மன் ஸன்னதி தெரு, செங்கோட்டை. (41) கே. ரங்கஸ்வாமி. இலத்தூர். (42) அ. அய்யம்பெருமாள், இரவிவர்மன் புதுத் தெரு. வடசேரி. நாகர்கோவில். (43) ஆர். மகாதேவய்யர். தளவாய்த் தெரு. வடிவீஸ்வரம். (44) வி. ஜி. சுப்ரமணிய அய்யர், ஜவுளி வியாபாரம். சித்தூர். (கொச்சின்) (45) கமலாம்பாள், c/o ஆர். பி. எம். எஸ். ஸ்ரீநிவாஸன், கிரமாண்ட் ஹவுஸ், நாளிக் ரோட். (46) எஸ். மகாலிங்கம். சாய இலாகா. கோபால் மில்ஸ். பிரோச். (47) வி. ஆர். ராமச்சந்திரன். சௌரங்கெடரஸ், எல்ஜின் ரோட், கல்கத்தா.



We hereby certify that the above is the solution in original deposited with us by *Ananda Vikatan* on 15th Nov. 43 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For THE INDIAN BANK, LTD.

Secretary.

~~Asst. Secretary~~






# இந்தியன் பாங்க் லிமிடெட்

**இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்**

தென்னிந்தியாவில் முக்கிய இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள்

| | |
|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. 1,00,00,000 |
| வழங்கி, வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் (1-11-43 தேதியில்) | ரூ. 28,80,000 |
| ரிஸர்வ் நிதி | ரூ. 29,00,000 |

மொத்த ஆஸ்திகள் ரூ. 8 கோடிக்கு அதிகம்

N. கோபால அய்யர் (செக்ரடரி).

# கலாக்ஷேத்திரம்

## அடையாறில் கிறிஸ்மஸ் வார புரோகிராம்கள்

1. டிஸம்பர் 26 : மாலை 6-30 மணி
   பரத நாட்டியம் : **ஸ்ரீமதி ருக்மணி தேவி**
2. டிஸம்பர் 30 : மாலை 5-45 மணி
   பாட்டுக் கச்சேரி: சங்கீத கலாநிதி டைகர் வரதாச்சாரியார்
3. டிஸம்பர் 31 : மாலை 6-30 மணி
   நடன - நாடக கதம்பம் (கதகளி) : ருக்மணி தேவியும், பல பிரபல கதகளி நடிகர்களும் நடிக்கும் "ருக்மணி ஸ்வயம்வரம்" என்னும் நாடகம்.
4. ஜனவரி 2, 1944 : மாலை 6-30 மணி
   நடன - நாடக கதம்பம் (கதகளி) : "ருக்மணி ஸ்வயம் வரம்" என்னும் நாடகம்.

## அடையார் தியேட்டரில்

டிக்கட்டுகள் விவரம் (ஒவ்வொரு தினத்திற்கும்) : போஷகர்கள் ரூ. 15/- ரிஸர்வட் : ரூ. 10&ரூ. 5/- ரிஸர்வ் செய்யப்படாதவை ரூ. 3/- ரூ. 2/- ரூ. 1/-

டிக்கட்டுகள் விற்குமிடம் :

கலாக்ஷேத்திரா ஆபீஸ், பெஸன்ட் கார்டென்ஸ், அடையார்.

**ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸங்கீத ஸபை, திருச்சி**

26-12-43 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு

மலைக்கோவில் நூற்றுக்கால் மண்டபத்தில்

இசைச் செல்வி **ஸ்ரீமதி K. B. சுந்தராம்பாள்**

அவர்களால் தக்க பக்க வாத்தியங்களுடன் ஸங்கீதக் கச்சேரி நடைபெறும்

டிக்கெட் வரியுள்படி :— ரூ. 3, 2, 1. ஸ்திரீகளுக்கு ரூ. 2, அணா 12.

டிக்கெட் கிடைக்குமிடம்:—"கான்பூர் ஹவுஸ்" சின்னக்கடை வீதி&"குவாலிட்டி காப்பி மார்ட்" சைனு பஜார், திருச்சி.

*Mike arrangements by M/s Radio Sales & Service, Trichy.*

**"Book Your Seats Earlier."** **S. G. RATNAM,** *Organiser.*









அது அவள் வளர
உதவி அளிக்கிறது

வீட்டோபெரின், குழந்தைகளை புஷ்டியாய் வளரச் செய்யும் டானிக்குகளில் நிகரற்றதாய் இருக்கிறது. அதில் வைட்டமின் ஏயும், டியும் உள்ளன. மேலும் குழந்தைகள் ஆரோக்கியமாயும் புஷ்டியாயும் சந்தோஷமாகவும் இருக்கச் செய்ய உதவக்கூடிய முக்கிய ஆகார உணவுகளான இரும்பு, தாம்பிரம், மாங்கனீஸ், கால்சியம், பாஸ்பரஸ், சோடியம், பொட்டாசியம் இவைகளின் சத்துக்கள், மால்ட், தேன் எல்லாம் ஒன்றாய் சேர்ந்திருக்கின்றன குழந்தைகள் அதன் நறுமணத்தை விரும்புவார்கள்.

I·T·L

# விட்டோபெரின்



தமிழ்நாடு ஏஜண்டுகள்:
பெஸ்ட் & கம்பெனி லிமிடெட்

VB-K. 4. TM

# மூத்திர வலி

## 3 மணி நேரத்தில் மறைந்தது

உங்கள் முதுகிலும், அள்ளைகளிலும் கொஞ்சமாக ஓயாமல் வலியிருந்து கொண்டேயிருக்கிறதா? அல்லது வலி ஈட்டியால் குத்துவதுபோல் பொறுக்க முடியாமல் இருக்கிறதா? சாதாரண மருந்துகளால் இந்த வலியைப் போக்க முடியாது. ஏனெனில் இதற்கு மூத்திரக் காய்களிலுள்ள கிருமிகள் கொல்லப்படவேண்டும். மூத்திரக்காய், மூத்திரப்பை கோளாறுகளினால் விளையும் இதர உபாதைகள்: அடிக்கடி எரிச்சல் மிகுந்த சிறுநீர்ப் போக்கு, இரவில் தூக்கம் கலைந்து விழித்தெழுதல், கால்களில் வலி, இடுப்பு வலி, தைரியமின்மை, தலைவலி, மயக்கம், கீல்வாதம், பசியின்மை, பலஹீனம், கணுக்கால் வீக்கம் முதலியன. ஸிஸ்டெக்ஸ் (Cystex) இவைகளின் மூல காரணத்தைப் போக்கி இவ்வுபாதைகளை அடியோடு ஒழிக்கிறது. சாப்பிட்ட 24 மணி நேரத்திற்குள் வேலை செய்ய ஆரம்பித்து 8 தினங்களுக்குள் பூரண குணமளிக்கிறது. குணமில்லையேல் பணம் வாபஸ் என்னும் உத்தரவாதத்தின் கீழ் ஸிஸ்டெக்ஸ் (Cystex) விற்கப்படுகிறது. இன்றே வாங்குங்கள்! 24 மணி நேரத்தில் உபாதை நீங்கி 1 வாரத்திற்குள் பூரண குணம் பெறுவீர்கள். எங்கள் உத்தரவாதம் உங்களுக்கு ஆதாரம்.

# ஸிஸ்டெக்ஸ்

மூத்திரக்காய் உபாதைகளுக்கும் கீல்வாதத்திற்கும்.

இப்பொழுது 3 சைஸ்களில் விற்கப் படுகிறது. ரூ. 1/- ரூ. 2/4. ரூ. 4/8.

D B 16/5



Edited, Printed & Published by S. S. Vasan at the Ananda Vikatan Press, 140, Popham's Broadway, Madras.



சென்னை-600 001

# றுகளில் ரத்தம் கசிந்தால்

—உடனே கவனிக்கவேண்டும்!



பல் சொத்தைக்கு இந்த எச்சரிக்கையை அசட்டை செய்யா
தீர்கள்! ரத்தம் கசிவது பயோரியா ஜின்ஜிவிடிஸ் இவை
களின் முதல் சின்னம்—இக்கொடிய ஈறு வியாதிகள் உங்கள்
பற்களை நாசமாக்கி தேகம் முழுவதையுமே கெடுத்துவிடக்
கூடும். கிப்ஸ் "எஸ். ஆர்." பல் பேஸ்ட் உபயோகியுங்கள்.
அதிலுள்ள ஸோடியம் ரெஸினோலியேட்டைத்தான் பல் வைத்தி
யர்கள் ஈறு வியாதிகளுக்கு உபயோகிக்கிறார்கள். கிப்ஸ்
"எஸ்.ஆர்." வழக்கமாக உபயோகித்தால் அது உங்கள் ஈறு
களை ஆரோக்கியமாகவும் பற்களை உறுதியாகவும் இருக்கச்செய்து
தேகாரோக்கியத்தையும் பாதுகாக்கும்.

Gibbs

"S.R." TOOTHPASTE

GSR. 19-33 TM

D. & W. GIBBS LTD., LONDON, ENGLAND

Registered No. M. 2135

1.2.83




*சோப் பாக் செய்பவர் சொல்லுகிறார் . . .*

“அழுக்கடைந்த வஸ்திரங்களை சுலபமாக வெளுப்பதற்கு “சு
மாக வெளுக்கும் நுரை” உதவுகிறது. எனக்கும் என்னுடன் வே
செய்வோருக்கும் ஸன்லைட் சோப்பை உபயோகப் படுத்துவதா
இது நன்றாகத் தெரியும். ஆடைகளில் இருக்கும் அழுக்கை
தானாகவே போக்கக்கூடிய சக்திக்கு “சுயமாக வெளுக்கும் நுரை
என்று பெயர். ஸன்லைட் சோப்பின் நுரை வெளுக்கும் வேலை
சிரமமின்றி செய்கிறது. நமது சோப் செய்யும் ரசாயன சாஸ்திரிகள்
அதில் ‘சுய சக்தி’ வாய்ந்த நுரை நிறைய இருப்பதால அவ்வாறு
சாத்தியமாகிற தெனகிறார்கள். ‘சுய சக்தி’ வாய்ந்த சோப்
அழுக்கைத் தொட்ட உடன் போக்கிவிடுகிறது.”



ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது